
Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# ஸ்ரீ லங்கா


அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர் 11 : இதழ் : 2 ஜனவரி, 1959 விலை : சதம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப் படம்



19 ம் நூற்றாண்டின் பிற் பகுதியிலே மின்சார சக்தியை உற்பத்தி செய்யும் இயந்திரங்களை உபயோகிக்கத் தொடங்கியதும் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் மின்சார சக்தி உபயோகிக்கப்படலாயிற்று. பெரிய தொழிற்சாலைகளை இயக்கவும், வீட்டில் சமையல் முதல் படுக்கைவரை மின்சாரத்தை உபயோகிக்கவும் மக்கள் பழகிக்கொண்டனர். அதன் பிறகு நீரிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யலாமெனக் கண்டு பிடித்ததும், அதிக செலவின்றி நாடு முழுவதும் மின்சாரத்தைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இலங்கையில் நீர் மின்சார சக்தியை உற்பத்திசெய்யலாமென கண்டுபிடிக்கப்பட்டது 1900 ம் ஆண்டிலாகும். இத்துறையில் சிறந்த பொறியியல் அறிஞரான திரு. டி. ஜே. விமலசுரேந்திரா முன்னோடியாகக் கடமையாற்றினர். லக்ஸபான நீர் மின்சாரத்திட்டம் இதன்பயனாக ஆரம்பிக்கப்பட்டது. லக்ஸபானத் திட்டம் கடல் மட்டத்துக்கு 6,000 அடிக்கு மேல் உயரமான இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு கடந்த முப்பது வருடங்களாக உருவாகிவருகின்றது.

இத்திட்டத்தின் முதலாம் கட்டம் பூர்த்தியடைந்ததும், இரண்டாம் கட்டம் குறுகிய காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. அண்மையில் லக்ஸபான நீர் மின்சாரத் திட்டத்தின் II A கட்டத்தை ஆரம்பித்துவைத்து பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பேசியபொழுது எடுக்கப்பட்ட படத்தை அட்டைப்படம் அலங்கரிக்கிறது.

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| (1) அரசாங்கத்தின் வைத்தியக்கொள்கை .. .. | 3 |
| (2) ஆயுள்வேத ஆஸ்பத்திரி .. .. .. | 5 |
| (3) புத்தாண்டே, வருக! .. .. .. | 8 |
| (4) ஈழத்து ஊர்ப் பெயர்கள் .. .. .. | 9 |
| (5) நாலந்தா சர்வகலாசாலை .. .. .. | 13 |
| (6) காட்டுமத்தியில் பழைய உருத்திரபுரச் சிவாலயம் .. .. | 15 |
| (7) இலங்கையின் இயற்கை வளம்—ஏரிகள் .. .. | 16 |
| (8) அநகாரிக தர்மபாலர் .. .. .. | 19 |
| (9) மின்சாரத்துறையில் மேலும் ஒரு படி முன்னேற்றம் .. | 23 |
| (10) இயற்கை நூதனசாலையை நிறுவுதல் .. .. | 28 |


J. N. R 27950—5508 (1/59)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.21, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 179

# அரசாங்கத்தின் வைத்தியக் கொள்கை

## திருமதி விமலா விஜயவர்தனுவின் வானொலிப் பேச்சு

***சுகாதார மந்திரி திருமதி விமலா விஜயவர்தனு சமீபத்தில் வானொலியில் மேல்நாட்டு வைத்தியமுறை பற்றியும் ஆயுள்வேத முறைபற்றியும் அரசாங்கம் அனுஷ்டிக்கும் கொள்கையைப்பற்றியும் அரசாங்கத்தின் இதர வைத்தியத் திட்டங்கள்பற்றியும் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினுர். அச்சொற்பொழிவு கீழே*** *தரப்படுகிறது.*

*மேல்நாட்டு வைத்திய வசதிகளையும் ஆயுள் வேத வைத்திய வசதிகளையும் சமநிலைக்குக் கொண்டு வருவதற்கான சில ஆலோசனைகளை விளக்கி பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு, அவர்களின் அபிப்பிராயங்களை அறிதற்பொருட்டு, ஒரு அறிக்கை அனுப்பப்பட்டது. இத்திட்டம் பற்றி பத்திரிகைகளில் வெளியான அறிக்கைகள் பொது ஜனங்களின் மனதில் சில தப்பபிப்பிராயங்களை உண்டுபண்ணியிருப்பதால் இது பற்றி ஒரு விளக்கம் தருவது அவசியமென நான் நம்புகிறேன்.*

*மக்களுக்கு இலவச வைத்திய வசதிகள் நல்கும் கொள்கையை முந்திய அரசாங்கங்கள் ஏற்றுக் கொண்ட போதிலும் அதனைப் பூரணமாக அமுல் நடத்த வில்லை. முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளில் அங்குள்ள ஜனங்களின் ஒவ்வொரு ஆயிரம் பேருக்கும் ஒரு வைத்தியர் இருக்கின்றுர். இந்நாட்டிலோ 2,139 வைத்தியர்கள் மாத்திரமே இருக்கின்றனர். அவர்களில் 1,079 பேர்கள் மேல்நாட்டு வைத்தியத்தில் தேர்ச்சி பெற்றவர்கள். 1,034 பேர்கள் அப்போதிக்கரிமார். மற்ற 26 பேர்களும் ஆயுள்வேத வைத்தியர்களாவர். 90 லட்சம் மக்களினதும் வருடந் தோறும் 250,000 வீதம் அதிகரித்து வரும் ஜனத்தொகையினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இவர்களை அரசாங்கம் அமர்த்தியிருக்கின்றது. அதாவது, ஒவ்வொரு 4,675 பேருக்கு ஒரு அரசாங்க வைத்தியரே இருக்கின்றுர். ஒவ்வொரு 2,500 பேருக்கும் ஒரு வைத்தியரை உதவக்கூடியதாக சௌக்கியத் திட்டமிடுவதே எமது எண்ணமாகும். இதனைச் சாதிப்பதற்கு, இன்றைய ஜனத்தொகைக்கு 3,600 வைத்தியர்களை அரசாங்கம் வேலைக்கமர்த்த வேண்டும். ஆனுல் இன்று 2,113 மேல் நாட்டு வைத்தியர்களும் அப்போதிக்கரிமாரும் 26 ஆயுள் வேத வைத்தியர்களுந்தான் அரசாங்க சேவையில் அமர்த்தப்பட்டிருக்கிறுர்கள். 3,600 வைத்தியர்கள் தேவையாக இருக்கும் போது ஏன் 2,113 வைத்தியர்கள் மட்டுமே வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறுர்கள் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. அதற்குக் காரணம் அரசாங்க சேவையில் சேரவிருப்பமுள்ள மேல்நாட்டு வைத்திய முறையில் தேர்ச்சிபெற்ற வைத்தியர்கள் 2,113 க்கு மேல் இல்லாதிருப்பதேயாம். இன்று சொந்தத்தில் வைத்தியத் தொழில் நடாத்தும் மேல் நாட்டு வைத்திய முறையில் பயிற்சி பெற்றவர்கள் சுமார் 1,000 பேர்கள் இருக்கின்றுர்கள்.*

*சர்வகலாசாலையிலிருந்து வருடந்தோறும் 100 வைத்தியர்கள் வெளியேறுகிறுர்கள். வருடந்தோறும் அதிகரிக்கும் ஜனத்தொகையினருக்குக் கூட இவர்கள் போதாமல் இருக்கின்றுர்கள். மேலும் இரண்டு வைத்திய கலாசாலை திறக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் அவற்றினுல் அடுத்த 7 அல்லது 8 வருடங்களுக்கு எத்தகை நன்மையும் எதிர்பார்ப்பதற்கில்லை. 2,500 பேருக்கு ஒரு வைத்தியர் இருக்க வேண்டுமாயின் அரசாங்க சௌக்கிய சேவையில் தொண்டாற்றுவதற்கு உடனடியாக 1,461 வைத்தியர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மேல்நாட்டு வைத்தியத்தில் தேர்ச்சி பெற்றவர்களை மட்டுமே சேவைக்கமர்த்துவதாயின் சமீப எதிர்காலத்தில் இத்தனை வைத்தியர்களைப் பெறுவது சாத்தியமன்று. இதற்கிடையில் அரசாங்கம் 26 ஆயுள்வேத வைத்தியர்களை மட்டுமே சேவைசெய்ய அமர்த்தியிருக்கின்றது. இதற்குக் காரணம் ஆயுள்வேத வைத்தியர்கள் குறைவாக இருப்பதல்ல, ஆனுல் முந்திய அரசாங்கங்கள் ஆயுள்வேதத்தில் போதிய ஆர்வம் காட்டாததேயாகும். 7,600 க்கதிகமான பதிவுபெற்ற ஆயுள்வேத வைத்தியர்கள் இருக்கின்றுர்கள். சொந்தத்தில் தொழில் நடாத்தும் ஆயுள்வேத வைத்தியர்களின் சேவைகள் கிடைப்பதாலேயே மேல்நாட்டு வைத்தியத்தில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்களின் பற்ருக்குறையால் மக்கள் அவ்வளவாகப் பாதிக்கப்படா திருக்கின்றனர். அரசாங்கத்தில் வேலை பார்க்கும் 26 ஆயுள்வேத வைத்தியர்களும் அரசாங்கத்தால் நடாத்தப்படும் ஒரேயொரு ஆயுள் வேத ஆசுப்பத்திரியில் பொறளையிலுள்ள சுதேச வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த ஆசுப்பத்திரியில் பணியாற்றுகிறுர்கள். இந்த 26 ஆயுள்வேத வைத்தியர்களும் கடந்த ஆண்டில் இந்த ஆசுப்பத்திரியில், 298,563 நோயாளிகளுக்கு வைத்தியம் செய்தார்கள். இதிலிருந்து பொதுஜனங்கள் ஆயுள் வேத வைத்தியத்தை எவ்வளவு தூரம் விரும்புகின்றுர்களென்பது புலனுகின்றது. இக்காரணத்தை முன்னிட்டு ஆயுள் வேத வைத்தியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளவும் அதேசமயத்தில் மேல் நாட்டு வைத்தியத்தில் தேர்ச்சிபெற்ற வைத்தியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் நாம் உத்தேசிக்கின்றோம். சௌக்கிய சேவைகளை விஸ்தரிப்பதற்கு நாங்கள் ஆயுள் வேத வைத்தியர்களை உபயோகிக்காவிட்டால் அரசாங்கம் ஆயுள்வேத வைத்திய முறையை அங்கீகரித்திருக்கின்றது என்று கூறுவதில் அர்த்தமேயில்லை. ஆதலால் ஆயுள்வேத வைத்தியர்களைத்திரட்டுதல், ஆயுள்வேதத்தை விருத்தி செய்யும் அசாங்கத்தின் கொள்கையை செயல் படுத்துவதற்கான முதல் நடவடிக்கையாகும்.

இதனைச் செய்கையில் மேல்நாட்டு, ஆயுள் வேத வைத்திய சேவைகளை சமநிலைக்குக் கொண்டு வர வேண்டியதில்லை. இரு வைத்திய முறைகளையும் ஒன்று படுத்துவதற்கு இன்னும் காலம் வரவில்லையென்று நான் அபிப்பிராயப்படுகின்றேன். ஆனல் ஆயுள் வேத வைத்தியமுறையும் மேல்நாட்டு வைத்திய முறையும் நல்கும் இருதரப்பட்ட சேவைகளையும், இரு வைத்திய முறைகளிலும் ஈடுபட்டுள்ள வைத்தியர்களிடையே எவ்வித மனக்கசப்பும் உண்டாகாத முறையில், சம நிலைக்குக் கொண்டு வரலாமென்று நான் நம்புகிறேன். இது, ஆயுள்வேத, மேல் நாட்டு வைத்திய முறைகளை ஒன்று கலப்பதற்கான முயற்சியாகாது.

இன்று சத்திர வைத்தியம் போன்ற சில வைத்தியத் துறைகளில் ஆயுள்வேத வைத்தியர்கள் பயிற்சி பெற வில்லை. எனினும் ஒரு மருந்துச்சாலைக்கு வேண்டிய சேவைகளை அவர்கள் நல்க முடியும். மருந்துச் சாலைகளில் வேலை செய்வதற்கு ஆயுள்வேத வைத்தியர்களை அமர்த்தினுல் மேல் நாட்டு வைத்தியத்தில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள், போதிய வைத்தியர்களில்லாது இருக்கும் ஆசுப்பத்திரிகளில் கடமையாற்றக் கூடியதாக இருக்கும். இத்திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஆசுப்பத்திரிகளுக்கும் ஆயுள் வேத மருந்துச்சாலைக்குமிடையே நெருங்கிய ஒருமைப்பாடு இருத்தல் வேண்டும். ஒரு பிராந்தியத்திலுள்ள ஆயுள்வேத மருந்துச்சாலைகளுக்கும் ஆசுப்பத்திரிகளுக்குமிடையே தொலைபேசித் தொடர்பு இருப்பதோடு நோயாளர் வண்டிச் சேவையொன்றும் இருத்தல் வேண்டும். ஒரு மருந்துச்சாலைக்குப் பொறுப்பாக இருக்கும் வைத்தியர் ஒரு நோயாளியை மேல்நாட்டு வைத்திய ஆசுப்பத்திரிக்கு அனுப்புவதே சிறந்ததென்று கருதினுல் அவர் அந் நோயாளியை உடனே அங்கு அனுப்ப வேண்டும். அந்த ஆசுபத்திரி அத் நோயாளியை ஏற்று அவருக்குச் சிகிச்சையளிக்க வேண்டும். இரு வைத்திய முறைகளையும் ஒன்று படுத்துவதற்கு இந்த விதமான ஆரம்ப ஏற்பாடுகள் செய்வது கஷ்டமன்று.

போதிய வைத்திய வசதிகளில்லாத பிரதேசங்களில் வருடமொன்றுக்கு 300 ஆயுள்வேத வைத்தியசாலைகள் விதம் தாபிப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். மூன்று வருடங்களுள் 900 ஆயுள்வேத மருந்துச்சாலைகளை தாபிப்பது சாத்தியமாகும். அனுபவமுள்ள பதிவு பெற்ற 7,600 ஆயுள்வேத வைத்தியர்களிலிருந்து இந்த மருந்துச்சாலைகளை நடத்துவதற்கு வேண்டிய ஆயுள் வேத வைத்தியர்களைப் பொறுக்குவது சிரமமான காரியமன்று. பதிவு பெற்ற ஆயுள் வேத வைத்தியர்களிடையே 900 க்கு மேற்பட்டவர்கள் படித்துப்பட்டம் பெற்றவர்களாயிருக்கிறர்கள் . மற்றவர்கள் பிரபல வைத்தியர்களின் கீழ் நெடுங்காலம் சிட்சைபெற்று பயிற்சியடைந்திருக்கின்றர்கள். சிட்சை மூலம் பயிற்சி பெறுவது மிக முக்கியமான தாகும். சென்ற தடவை நான் இங்கிலாந்துக்கு விஜயஞ்செய்திருந்த பொழுது பிரபல்யம் வாய்ந்த ஆங்கிலேய வைத்தியர்களோடு நடாத்திய பேச்சு வார்த்தைகளின்போது இந்த உண்மை எனக்குத் தெளிவாகப் புலனுயிற்று. பட்டம் பெருத ஆயுள்வேத வைத்தியர்கள் ஒவ்வொருவரும் பட்டம் பெருதவைத்தியர்களாகப் பதிவு செய்வதற்குக் குறைந்தது ஆறு வருட காலம் வைத்தியர்களாகத் தொழில் புரிந்திருக்கிறர்கள். 1952 ம் ஆண்டோடு பட்டம் பெருத வைத்தியர்களைப் பதிவு செய்வது நிறுத்தப்பட்டுவிட்டது.

நோயாளிகளை ஆயுள்வேத வைத்தியர்களின் தயவில் விடுவதால் நோயாளரின் மரணவீதம் அதிகரிக்குமென்றும் தொல்லை தரும் ஒரு கட்சியை சமாதானப் படுத்துவதற்காக எடுக்கப்படும் ஒரு அரசியல் நடவடிக்கையே இதுவென்றும் சில பத்திரிகைகள் கூறியிருக்கின்றன. இந்த உத்தேசங்களைச் சரிவரப்புரிந்து கொள்ளாததின் விளைவாகவே இவ்விதம் கூறப்பட்டதென்பதை நான் விசனத்துடன் சொல்ல வேண்டியிருக்கின்றது.

இந்த உத்தேசங்களை அமைச்சர் அவை முன்பு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்திலுள்ள அரசாங்க அங்கத்தவர்களை மாத்திரமன்றி சமசமாஜக் கட்சிள் ஐக்கிய தேசியக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சமஷ்டிக்கட்சி, சுயேச்சை வாதிகள் போன்ற சகல எதிர்க் கட்சி அங்கத்தவர்களையும் கலந்தாலோசிப்பதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். எந்த அரசாங்கத் திட்டத்தையும் பற்றிய செயல் முறைகளை முடிவாகத் தீர்மானிப்பதற்கு முன்னர் எதிர்க்கட்சிகள் கலந்தாலோசிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுதான் என்று நான் நினைக்கிறேன். நோயாளிகளுக்கு சேவைசெய்யும் விஷயத்தில் அரசியல் அபிலாஷைகளுக்கு இடமளிக்கப்

(7 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயுள்வேத ஆஸ்பத்திரியின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துப் பிரதமர் சொற்பொழிவாற்றினர்.

# ஆயுள்வேத ஆஸ்பத்திரி

### புதிய கட்டடத் திறப்பு விழா

கொட்டா ரோட்டிலுள்ள ஆயுள்வேத ஆஸ்பத்திரியின் வெளி நோயாளர் பகுதியின் புதிய கட்டடத்தையும் பரிபாலன அலுவலகத்தையும் பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் ஜனவரி மாதம் 10ம் திகதி திறந்து வைத்தார்கள். சுகாதார மந்திரி திருமதி விமலா விஜயவர்தன புதிய வார்டுகளை அதே தினத்தில் திறந்து வைத்தார்கள்.


பிரதம மந்திரியும் சுகாதார மந்திரியும் ஆஸ்பத்திரி வாசலில் வந்திறங்கி புதிய கட்டடத்தை நோக்கிச் சென்றபோது மங்கள பேரிகை முழங்கியது.

சுதேச வைத்திய சபையின் தலைவர் திரு. ஜயவர்தன பிரதமருக்கு மலர்மாலை சூட்டி வரவேற்றார். செல்வி லக்ஷ்மன் ஜயவர்தன சுகாதார மந்திரிக்கு ஒரு மலர்ச் செண்டைக் கொடுத்தார்.

பிரதமர் முதலில் ஒரு நீல நிற நாடாவை வெட்டி இரண்டு கட்டடங்களையும் திறந்து வைத்தார். பின்னர் குத்துவிளக்கேற்றி வைத்தார்.

ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளிகள் வருகிறார்கள் என்றும், இவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் ஆஸ்பத்திரி அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயுள்வேத ஆஸ்பத்திரியின் புதிய கட்டடம்.

களை எதிர்நோக்கியுள்ள கஷ்டங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வசதிகள் மூலம் குறைந்து விடுமென்று தாம் நம்புவதாகவும் பிரதமர் கூறினர். மேலும் அவர் பேசுகையில் ஆயுள்வேதத்திற்கென ஒரு தனி இலாகா அமைத்து தற்போதைய அரசாங்கம் அரும் பணி புரிந்திருக்கிறதென்றும், வைத்திய முறைகளைப் பற்றி சச்சரவு செய்யாது, நாட்டின் நன்மைக்காக எதிலும் அதிசிறந்த அம்சத்தை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முயல்கிறதென்றும் குறிப்பிட்டார்.

சுகாதார மந்திரி திருமதி விமலா விஜயவர்தன புதிய வார்டுகளைத் திறந்து வைத்துப் பேசுகையில், ஆயுள்வேத வைத்தியர்கள்தான் அந்த வைத்திய முறையை அபிவிருத்தி செய்ய உதவுதல் வேண்டும். அரசாங்கம் அவர்களுக்குத் தேவையான உதவியளிக்கும். இன்னும் பல விஸ்தரிப்புகளைச் செய்வதற்காக ஐந்து ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் வைத்திய கவுன்சிலைப் போன்ற ஒரு சபையினைத் தாபிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தின் பின்னர் அங்கு குழுமியிருந்த மக்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று கட்டிடங்களைப் பார்வையிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயுள்வேத ஆஸ்பத்திரியின் பிறிதொரு கட்டடத்தைச் சுகாதார மந்திரி திருமதி. விமலா விஜயவர்த்தன திறந்துவைத்தார்.

## அரசாங்கத்தின் வைத்தியக்......

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

படாதென்பதே எனது திடமான நம்பிக்கையாகும். தேசிய தேவைகளுக்கேற்ப அதனை நியாயமான முறையில் செய்தல் வேண்டும். சில பத்திரிகைகள் கூறிய பிரகாரம் தொல்லை தரும் ஒரு கட்சியை சமாதானப் படுத்துவதே எனது நோக்கமாயின் நான் எல்லா அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசித்திருக்கவேண்டியதில்லை.

ஒரு ஆயுள்வேத மருந்து உற்பத்திச்சாலையை தாபிப்பது பற்றிய யோசனையொன்று இப்பொழுது கைத்தொழில் மீன்பிடி அமைச்சால் ஆராயப்பட்டு வருகின்றதென்பதை இச்சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மருந்து உற்பத்திச்சாலை தாபிதமானால் தேவையான மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக வெளி நாடுகளுக்குப் பெருந்தொகையான பணம் செல்வது தடுக்கப்படுவதோடு இந்நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்திக்கும் பெரும் உதவியாயிருக்கும். இப்பத்திரிகைகள் தப்பான அறிக்கைகளைப் பிரசுரிப்பதற்கு முன்னர் கைத்தொழில் அமைச்சை விசாரித்தால் பொதுஜனங்களுக்கு நல்லமுறையில் சேவை செய்யக்கூடியதாயிருக்கும்.

சுதேசமருந்து வகைகளை விருத்தி செய்வதற்காக அரசாங்கம் செய்ய உத்தேசித்துள்ள திட்டங்களைக் காலக்கிரமத்தில் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்க எண்ணியுள்ளேன். அத்திட்டங்கள் நிபுணர்களால் தயாரிக்கப்படவேண்டுமே தவிர ஒரு அமைச்சராலோ அல்லது ஒரு அதிகாரியாலோ தயாரிக்கப்படக் கூடியவையல்ல. இப்பொழுது சட்டத் தயாரிப்பாளர் வசமுள்ள ஆயுள்வேதம்பற்றிய உத்தேச மசோதாவே சுதேச மருந்து வகைகளின் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட எதிர்கால நடவடிக்கைகளுக்கு மூலாதாரமாகவிருக்கும். அதில் வைத்தியர்களைப் பதிவு செய்தல் உட்பட ஆயுள்வேத வைத்தியத்தொழிலை சீராக்கிக்கட்டுப்படுத்துதற்கும், ஆயுள்வேத வைத்தியக்கல்வியைக் கிரமப் படுத்துதற்கும், ஆயுள்வேத வைத்திய ஆய்வுகள் நடாத்துதற்கும், ஆயுள்வேத மருந்துக்களைக் கட்டுப்படுத்தி, தரப்படுத்தி விநியோகிப்பதற்கும் வேண்டிய தாபனத்தை ஏற்படுத்துதற்கான ஏற்பாடு அடங்கியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டே, வருக!

"மகாகவி"

கொடிகள் ஆடல் இட உலவு தென்றல் தவழ்
'குளறி' வண்டு அறியவே
விடிக காலை; இருள் விலகவே; மலர்கள்
விரிக; செய்யகதிர் வருகவே
தடிகள் போல வெகு தொலைவிலே தெரியும்
நெடிய நம் பனைகள் இடையிலே!
முடிக தூங்குவது, முயல நூறுளது,
முறுவ லோடெழுக, விரைகவே.

அழகு செய்திடுக மனையை வாயிலினை;
அளவி லாத மகிழ் வடைக. நீர்
பழகும் வீணை ஒரு புதிய பாடல் தர
அருள்க, பாவைதிகர் சிறுமியர்
உழுக மண்ணை உயிர் வளர ஆடவர் இவ்
வுலக மேநிலையில் உயரவே;
ஒழுகும் வேர்வையினில் உடையு மேநனைய
உமது தோள் வலிமை உதவுவீர்.

(வேறு)

மின்னலும் புயலும் மழையும் பேரிடியும்
மிகைப் படக் கூறுதல் இயலா
அந்நெடுங் கொடிய ஊழிவெங் கடையின்
ஆழ்கடல் உடைப்பும் எம் ஊரைத்
தின்னவும், மக்கள் திணறவும், புவியோர்
திகைக்கவும், நகைக்கவும் ஆன
நென்னலைப் போக்கி நீ இவண் புகுந்தாய்;
நின்வரவு நல்வர வாக!
பற்றிய தீயும் பரவிய புகையும்
படிந்த நாம் பழைய நல் வாழ்வே
உற்றிட நடந்தாய். உனதுாம் பெரிதே;
உறுவதைப் பயந்து நீ ஒதுங்காய்;
கொற்றமும் அறமும் கோயிலும் மகிழக்,
கொலை மலைக் குகை களுள் ஒளிய,
இற்றை நாள் புலர இறங்கினுய் இங்கே!
எமக் கிது நல்வர வாக!

(வேறு)

கையில் ஒரு பெரிய நாலும் அறிவின் ஒளி
காலும் இரு விழியும் "இடர்போக!
உய்க!" எனுமொழியும் உள்ள நிறைவினிடை
ஊறும் அருளும் - இவை உனதாகி,
நையும் இனம் நிமிர நன்மை பல விளைய
நாட்கள் சில கொணரும் இனியோய், வா,
ஐய, புதுமை எம தாக உனது பொழு
தாக்கும் என உவகை அடைகின்றோம்.
இன்று வரை மிகவும் ஈண்டி உளது பொருள்
எங்கும். எமதறிஞர் எதிகோள் மேல்
சென்று சுழலுவன நாய்க ளோடும். இனைய
செய்கை கடவுளரும் அறிவோரோ—
அன்று! புறவெளியில் நாங்கள் தனி அரசர்
ஆதல் நிசம்! எனினும் அக மீதோ
நன்று நலிகிறது, நாளை இருள்கிறது,
நாடு நவை அகல வருவாயே!

## வழி பிறக்க நாம் வாழ்த்தி வணங்குவோம்

திரு. சி. எ. கணபதிப்பிள்ளை, குருமண்வெளி

1. "வழிபிறந்த" "வழிபிறந்த" தென்றே லங்கை
வானொலியிற் கவிஞர்சிலர் வந்துகூடி
களிமிகுந் தேன்தமிழிற் கவிதைபாடக்
கண்டுவகை கொண்டதெனக் கருக்கொள் மேகம்
மழைபொழிந்த திடிமுழக்கத்தோடு சேர்ந்து
வாழ்த்தியங்கு "சபாஸ்" உரைத்த வாறு போல
பழைய வருடந்தனைப் பார்க்கிலுமே யிந்தப்
பாற்பொங்கல் சிறந்ததெனப் பகரலாமே.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத் தொன்பான்
ஆண்டிதுவே லங்கைமக்கட் காசிர்வாத
மாயிருக்கு முற்பாத நிகழ்ச்சியாக
வண்ணப்பால் பொங்கி வழியவுமே கண்டார்
கோயில்களில் மணியோசை குரவையோடு
குதுகலித்துக் கும்பிட்டார் உழவர்கூடி
தாயிலங்கை நாட்டினில்வாழ் மக்களொன்றாய்த்
தான்வாழ வழிபிறக்கத் தையின்பொங்கல்

(22 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து ஊர்ப் பெயர்கள்

(கிழக்கிலங்கை)

பண்டிதமணி. ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்

உலகத்துப் பொருள்களைக் குறிக்கும் பெயர்களெல்லாம் இடுகுறி பற்றியும், காரணம் பற்றியும் உயர்ந்தோரால் இட்டு வழங்கப் பெறுவனவாகும். சில பொருள்களின் பெயர்கள் காரண இடுகுறியாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு வழங்கப்பெறும் பெயர்கள், பலவற்றுக்குப் பொதுவாகவும், ஒன்றுக்கே சிறப்பாகவும் உரிமை பூண்டு நிற்பதையும் நாம் அறிகின்றோம். நிலம், மரம் முதலியன போன்ற பெயர்கள் இடுகுறிப் பொதுப்பெயர்களாகும்; அணி, பறவை முதலிய பெயர்கள் காரணப் பொதுப் பெயர்களாக வழங்கப்பெறுகின்றன; மாமரம் முதலியன இடுகுறிச் சிறப்புப் பெயர்களாகவும், முடி முதலிய பெயர்கள் காரணச் சிறப்புப் பெயர்களாகவும் நின்று பொருள்களை விளக்குகின்றன. உலகத்துப் பொருள்களெல்லாம் இப்பெயர்களுள் அடங்குவதை நாம் அவ்வப் பெயர்களைக் கொண்டு அறிதல் கூடும். ஆயினும், காரணங் கருதிய பெயர்களுட் பல, காரணம் புலப்படாது நம்மால் வழங்கப்பெறுகின்றன. அக்காரணங்களைக் கண்டறியும் போதுதான் நமக்குப் பெரியதோர் மகிழ்ச்சியுண்டாகின்றது. என்ன காரணம்? என்பது ஆராய்ச்சி விருப்புள்ள மக்களின் பிரதான கேள்வியாயமைந்து நம்மை உண்மைக்கு வழி நடத்துகின்றது.

ஒரு நாட்டின்கணுள்ள ஊர்ப் பெயர்கள், தாபனங்களின் பெயர்கள் முதலியவற்றுட் பல, யாதேனும் காரணத்தோடு தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன. அக்காரணங்கள் பெரும்பாலும் சரித்திரப் பெருமை பெற்று நிற்பனவாதலின், அக்காரணங்களை அறிவதன் மூலம் நாட்டு வரலாற்றினைப் பற்றிய குறிப்புகளை நாம் தெரிந்து கொள்ளுதல் கூடும். ஆதலின், ஈழத்து ஊர்ப்பெயர்கள் என்னும் பொருளில் நிகழ்த்துகின்ற இன்றைய பேச்சிலே, கிழக்கிலங்கை ஊர்கள் சிலவற்றுக்குப் பெயர்கள் வந்தெய்திய காரணம் பற்றிய சில குறிப்புகளை விளக்க முயல்கின்றேன். யான் கூறும் இக்குறிப்புகள் வாயிலாக அவற்றோடு தொடர்பு கொண்டுள்ள சரித்திர வரலாறுகளையும் ஒருவாறு வெளியிட விழைகின்றேன். மட்டக்களப்பிலுள்ள சில ஊர்ப்பெயர்களைப் பற்றியே இங்கு பேசப் போகின்றேன்.

### மட்டக்களப்பு

கிழக்கு மாகாணத்தின் ஒரு பிரிவாயமைந்துள்ள மட்டக்களப்பு மாநாடு, மட்டக்களப்பு அன்னையின் முகத்தின் கண்ணுள்ளதோர் துவாரம் அல்லது வாய் போன்றது என்னுங் கருத்தமைந்த முகத்துவாரத்திலிருந்து பெருக்கெடுத்து வடக்குத் தெற்காக முப்பது 'மைல்' தூரம் நீண்டு கிடப்பதும், பெரும்பாலும் ஆழமற்றது மாகிய மட்டக்களப்பு வாவி யென்னும் நெடுநீர்ப் பரப்பினால் இரு நெடுங் கூறுகளாகப் பிரிந்து கிடக்கின்றது. இயற்கைப் பிரிவினை காரணமாக மட்டக்களப்பு வாவியின் இரு நெடுங் கரைகளிலும் இந்நாடு அமைந்து கிடப்பதால், இதற்கு மட்டக்களப்பு என்னும் பெயர் இட்டு வழங்கலாயிற்று.

மட்டக்களப்பு என்னுந் தொடர் மட்டம், களப்பு என்னும் இரு சொற்களாலாகியது. இஃது ஒரு தமிழ்த் தொடராகும். மட்டமான ஆழமற்ற நீர்நிலை என்பது இதன் பொருளாகும். ஆழமற்ற நீர்நிலையைக் களப்பு எனக் கூறுதல் இந்நாட்டு வழக்கமாகும். விபுலானந்த அடிகளாரும் இவ்வாறு கூறுதலால் இஃது உயர்ந்தோர் வழக்குமாயிற்று. மட்டக்களப்பின் தென்பாலிலுள்ள கோரைக் களப்பு என்னும் ஊர்ப்பெயரும் இது போன்ற காரணமுடையதே. கோரைப் புற்களுள்ள ஆழமற்ற நீர்நிலையின் பக்கத்தே அமைந்துள்ள ஊருக்கு இப்பெயர் வந்த காரணமும், மட்டக்களப்பு என்னும் பெயர்க் காரணமும் ஒன்றுபோல் அமைந்தனவேயாகும். சிங்களர் குடியேற்றத்துக்கு முன்பே களப்பு என்னுஞ் சொல் வழக்கு இங்குக் காணப்படுவதால் இச்சொல்லைத் தமிழ்ச் சொல்லாகவே கொள்ளுதல் பொருத்தமாகின்றது.

இனி, ஒருசிலர் மட்டக்களப்பு என்பது சேறுள்ள ஆழமற்ற நீர்நிலைக்குப் பெயராகி அதன் கரையிலுள்ள நாட்டுக்குக் காரணக் குறியா யமைந்ததெனக் கூறுவர். இவர் கூறுவதும் ஆராய்ச்சிக் குரியதேயாம்.

இன்னும் வேறொரு சிலர் மட்டக்களப்பு என்பதை மட்டுக்களப்பு எனக் கொண்டு தேன்பாயும் நாடு எனக் கூறி மகிழ்வர். தேனைக் குறிக்கும் மட்டு என்னுஞ் சொல் களப்பு என்னுஞ் சொல்லோடு தொடர்ந்து நிற்றற்குக் காரணமில்லை. இவ்வாறு தொடுத்து வழங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலுதல் மரபுமாகாது. இது வெறும் நாட்டுப்பற்றே யன்றி ஆராய்ச்சிக்குரியதுமாகாது. ஆதலின், மட்டக்களப்பு என்பதற்கு மட்டமான ஆழமில்லாத நீர்நிலை எனப் பொருள் கொள்வதே ஏற்புடையதாகின்றது.

### புளியந்தீவு

மட்டக்களப்புப் பிரிவின் தலைநகராயமைந்துள்ளது புளியந்தீவுப் பட்டினம். இது நாற்புறமும் மட்டக்களப்பு வாவியாற் சூழப்பட்டு நடுவே கிடத்தலால் தீவு என வழங்கலாயிற்று. புளியந்தீவு என்னும் பெயர்க் காரணத்தை ஆராயும்போது அது மட்டக்களப்புச் சரித்திரத்தோடு சம்பந்த முடையதாகக் காணப்படுகின்றது. போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்பு மட்டக்களப்பு ஆட்சியிலே உள்ளூர்த் தலைவர்கள் சிலரின் செல்வாக்கும் இடம்பெற்றிருந்ததாக நாம் அறிகின்றோம். வேடர் தலைவர்கள், முக்குவ வன்னிமைகள், திமிலர் தலைவர்கள் என்போர் சிறுசிறு பகுதிகளில் முடிசூடா மன்னர்களாக மட்டக்களப்பில் விளங்கியிருந்தமையும் நமக்குத் தெரிய வருகின்றது. இவர்களுள்ளே முக்குவர் தலைவர்கள் ஏற்றமுந் தோற்றமு முடையோராய் மிகவும் முக்கியம் பெற்றுத் திகழ்ந்தமையும் புலனாகின்றது.

புளியந்தீவு என்பதன் சரியான வடிவம் புலியன் தீவு என்பதாகும். காலப்போக்கிலே புலியன்தீவு என்பது புளியந்தீவு என மருவி வழங்கலாயிற்று. புலியன் என்பவன் ஒரு வேடர் தலைவன். இவனிருந்து ஆண்டமையாற் புலியன்தீவு என வழங்கப்பட்டுவந்த இவ்விடமானது மக்களின் சோம்பலாலும் உச்சாரண பேதத்தினாலும் புளியந்தீவு என மாறியது ஒரு வியப்பன்று. இவ்வாறு சிதைந்த மொழிகள் ஆயிரக் கணக்கிலுள்ளன. சிதைந்தவற்றுள்ளும் இயைந்தவற்றைக் கொள்ளுதல் மாபாதலின் புளியந்தீவு என்னும் வழக்கு நிலைபேறுடையதாயிற்று. புலியன், சிங்கன் முதலிய பெயர்கள் வீரவேட்டுவத் தலைவர்களுக்கு உரியனவாக அமைந்துள்ளதை நமது தமிழிலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. இவ்வழக்கு இராமாயண காலத்திலும் உள்ளது. குகன் என்னும் வேட்டுவர் தலைவன் சிருங்கிபேர நகரத்திலிருந்து ஆண்டானென இராமாயணங் கூறுகின்றது. இதனால், வேட்டுவராட்சியும் இருந்த தென்பதை நாமறிந்து கொள்கின்றோம். கந்த புராணத்தில் வருகின்ற வேல்நம்பி என்னும் வேடர் தலைவனும் இதற்குச் சான்றாகின்றான். மட்டக்களப்பிலே காத்தான் என்பவனிருந்து நாடுகாத்த இடம் காத்தான் குடி என்றும், கன்னன் என்பானிருந்து நிலங்காத்த இடம் கன்னன் குடா என்றும் வழங்கப்படுவதும் இதனையே குறித்து நிற்கின்றது. ஆதலின், புளியந்தீவு என்பதும் புலியன் என்பானிருந்து நாடு காத்தமையால் வந்தெய்திய பெயரென்பது நமக்கு விளங்குகின்றது.

மட்டக்களப்பிலே வேடர்களின் செல்வாக்கு மறைந்த பின்னர் முக்குவர்களின் ஆட்சியும் திமிலர்களின் ஆட்சியும் தலையெடுக்கலாயின. முக்குவருக்குந் திமிலருக்குமிடையே பகைமையுண்டாகி அது காரணமாக உள்ளூர்க் கலகங்களும் இடையிடையே நடைபெற்று வந்தன. சில ஊர்ப்பெயர்கள் இதனை ஒருவாறு தெரிவிப்பதை இங்கே காண்போம்.

### திமில தீவு

மட்டக்களப்புப் பட்டினத்தின் சமீபத்திலே திமில தீவு என்னும் ஓரூர் காணப்படுகின்றது. திமில் என்பது மீன் தோணி எனப் பொருள்படும் ஒரு தமிழ்ச் சொல். திமிலர் தலைவர் இருந்து ஆண்ட இடத்துக்கு திமிலதீவு என்னும் பெயர் உண்டாயிற்று. குகன் என்னும் வேட்டுவர் தலைவன் பல நாவாய்களுக்குத் தலைவனாயிருந்து நடத்தியதுபோல மட்டக்களப்பிலும் பல நாவாய்களுக்குத் தலைவர்களாகத் திமிலர் தலைவர்களும் இருந்திருக்கின்றார்கள். மீன்பிடித் தொழிலாற் பெரும் பொருளீட்டித் தமது பொருளாதாரப் பெருக்கினாலுஞ் செருக்கினாலும் திமிர் கொண்ட திமிலர் தலைவர்களுக்கும், உழவுத் தொழிலால் உணவைப் பெருக்கி உலகூட்டி வாழ்ந்த முக்குவத் தலைவர்களுக்கு மிடையே சண்டைகள் உண்டானமைக்குப் பொறாமையே காரணமாயிருந்தது. பின்வரும் ஊர்ப் பெயர்கள் இந்தச் சண்டைகள் சம்பந்தமுடையனவாய்க் காணப்படுகின்றன. மட்டக்களப்புக்கு வடக்கிலுள்ள **வந்தாறு மூலை, ஏறூவூர், சத்துருகொண்டான், சந்திவெளி** என்னும் ஊர்களும், தெற்கிலுள்ள **போரேறுதீவு,** என்னும் ஊரும் இச் சண்டைகளை நமக்கு இன்றும் நினைவூட்டுகின்றன. இப்போது இவ்வூர்களிலே முக்குவர் வகுப்பினரே பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். திமிலர் என்னும் வகுப்பினரை இங்கே காண்பது அரிதாயிற்று. நிற்க; இனி இவ்வூர்ப் பெயர்க் காரணங்களை நோக்குவோம்.

திமிலருக்கும் முக்குவருக்குமிடையே நிகழ்ந்த போரில் இரு வகுப்புப் படைகளும் ஒன்றையொன்றெதிர்த்துப் போரேறிய இடம் போரேறு தீவு எனப் பெயர் பெறலாயிற்று. போரேறு தீவு இப்பொழுது போரைதீவு எனச் சிதைந்து வழங்குகின்றது. சண்டை பற்றிய விபரங்களைத் தெளிவாக அறிதற்குரிய குறிப்புகள் கிடைக்கவில்லை. இவ்வூர்ப் பெயரைப் பற்றி ஒரு சிலர் வேறுவிதமாகவுங் கூறுவர். அது இலக்கியச் சுவையோடு சேர்ந்தது.

**"காவ லுழவர் கடுங்களத்துப் போரேறி**
**நாவலோஓ வென்றுரைக்கும் நாளோதை."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகக்கொண்டு அவர்கள் போரென்பது விற்போரன்று; நெற் போரேயெனக் கூறி இவ்வூரை வேளாண்மைத் தொழிலிற் சிறந்த இடமென்பர். இரு போர் நிகழ்ச்சிகளையும் இவ்வூரோடு சார்த்திக் கூறுதல் பொருந்துமாயினும், சண்டை சம்பந்தமான பொருளே நாட்டு வரலாற்றோடு பொருந்துவதாகும்.

**சத்துரு கொண்டான்** என்னும் ஊர்ப்பெயர் சத்துரு கொன்றான் என்பதன் திரிபாகும். முக்குவர் தலைவன் திமிலர் தலைவனைக் கொன்ற இடமென்பது இதன் பொருள் என்பர். சத்துரு கொண்டான் என இயல்பாகவே வைத்துச் சத்துருவைக் கைக்கொண்ட இடமென்று பொருள் சொல்வதே ஏற்றது என்கின்றார்கள் ஒரு சாரார். இரண்டையும் பொருத்தமாகக் கொள்ளலாம். அவ்வளவு வேறுபாடில்லை.

**ஏறூர்** என்பது திமிலர் படை முன்னேறுது தடைப்பட்ட இடமாகும். போரேறு தீவிற் போரேறிய இரு படைகளும் ஒன்றையொன்றெதிர்க்கத் திமிலர் படை வடக்கு நோக்கி முன்னேறிச் சென்று ஏறூரை யடைந்ததும், முக்குவரின் கேந்திரத்தானம் போன்ற அவ்வேறூரில் திமிலர்களுக்குக் கடும் எதிர்ப்பு உண்டாயிற்று. உண்டாகவே திமிலர் படை பின்வாங்கியோடித் தனது தலைவனையு மிழந்து தட்டுக்கெட்டது. இந்த இடமே யாம் முன்பு கூறிய சத்துரு கொண்டான் என்பது.

இந்நிலைமையிலே இரு படைகளும் ஒரு சமாதான உடன்படிக்கை செய்தற்காக ஓரிடத்திற் கூடின. அவ்வாறு கூடிச் சமாதானஞ் செய்து கொண்ட இடம் சந்திவெளியென வழங்கலாயிற்று. சந்தியென்பது சமாதானம் என்னும் பொருளுடையது. இது ஒரு வட சொல்; இதற்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

இரு பகுதிப் படைகளும் கைகலப்பு நீங்கி மனங் கலந்து ஆறியிருந்த இடத்துக்கு **வந்தாறு மூலை** எனப் பெயர் வந்தது. இந் நிகழ்ச்சிகளெல்லாம் கர்ண பரம்பரைக் கதைகளைக் கொண்டு அறிந்தனவே; வேறு ஆதார சாதனங்கள் கிடைக்கவில்லை. ஆதலின், இவற்றை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது.

இனி, சமய சம்பந்தமான சில ஊர்ப் பெயர்களை நோக்குவாம். மட்டக்களப்புத் தென்திசையிலே 11 ம் 12 ம் 'மைல்' களுக்கிடையிலே **குருக்கள்மடம்** என்னும் பெயர் வாய்ந்த ஓர் ஊர் உளது. இதன் பழம் பெயர் குருநாதர் மடம் என்பர். இது சமய சம்பந்தமான ஒரு கிராமமாகும். வேதாரணிய பரம்பரையைச் சேர்ந்த உலக குருநாதர் என்னும் சைவக் குரவர் ஒருவர் இன்றைக்கு 200 ஆண்டுகளின் முன்பு மட்டக்களப்புச்கு வந்து தமது ஆசார சீலத்துக்கும் வணக்க முறைக்கும் பொருந்த வாழ்க்கை நடத்துதற்கு ஏற்றதோர் இடத்தைத் தேடிக்கொண்டு வந்தார். வந்தவர் இந்த இடத்தைக் கண்டு இதன் சாந்தி நிலையில் ஈடுபட்டு இதனைத் தமது உறைவிடமாக்கி இங்குள்ள நல்லோரின் உதவி கொண்டு ஒரு திருமடமும் அமைத்து அதன்கண் தங்கியிருந்தார். பின்பு சின்னக் கதிர்காமம் என்னுந் திருப்பெயருடன் சுப்பிரமணியர் ஆலயம் ஒன்றையும் கட்டிப் பிரதிட்டை செய்தார். இவ்வாலயம் இப்போது செல்லக் கதிர்காம சுவாமி கோயில் என வழங்கப்படுகின்றது.

அக்காலத்திலே பெருஞ்செல்வராயிருந்த செட்டிப் போடியார் என்னும் வள்ளலின் உதவியுடன் பரிபாலனஞ் செய்யப்பட்டு வந்த இவ்வாலயம் இன்று பாழடைந்து கிடக்கின்றது. இதற்குக் காரணம் செட்டிப் போடியாரின் பரம்பரையில் வந்த ஒரு சிலர் கோயிலுக்குரிய செல்வங்களைக் கோயிலைப் பரிபாலித்தற்குச் செலவு செய்யாமல் தம்மையே பரிபாலித்தற்குச் செலவு செய்து கொண்டு தெய்வ பயமும் அடைக்கலப் பொருளைப் பாதுகாக்கும் உத்தரவாதத்தைப் பற்றிய உணர்ச்சியும் அற்றிருப்பதேயாகும்.

## கொக்கட்டிச்சோலை

மட்டக்களப்புக்குத் தெற்கே ஆறு 'மைல்' தூரத்தில் வாவியின் மேற்குக் கரையை யடுத்துள்ளது **கொக்கட்டிச் சோலை** என்னும் திருப்பதி. கொக்கட்டி என்பது ஒருவகைக் காட்டு மரம். கொக்கட்டி மரச் சோலையின் மத்தியிலே சுயம்பு மூர்த்தியாக எழுந்தளியிருக்கும் சிவபெருமான் தான் தோன்றீசுவரர் என்னுந் திருநாமத்துடன் கோயில் கொண்டிருப்பதால் இவ்வூர் கொக்கட்டிச் சோலை என வழங்கப்படுகின்றது. இந்தக் கொக்கட்டி மரம் மட்டக்களப்பிலே புனிதமுடையதாகப் போற்றப்படுகின்றது. கோயிற் கொடியேற்றங்களிலே கொடிமாமாகவும் இது உபயோகப்படுகின்றது. மட்டக்களப்பிலுள்ள ஒரேயொரு சிவன்கோயில் இதுவே.

இங்கே இன்னொரு விசேடமுண்டு. கல்லானைக்குக் கரும்பு தின்னக் கொடுத்த திருவிளையாடல் மதுரையிலே நிகழ்ந்தது. தான் தோன்றீசுவரின் எருத்து வாகனத்துக்குப் புல்லருந்தக் கொடுத்த திருவிளையாடல் இங்கே நிகழ்ந்தது. பக்த ரொருவர் புல்லருந்தக் கொடுத்த காட்சியையும், புல்லருந்திய அவ்வெருது சாணிபோட்ட காட்சியையும் கோயிலின் உள்வீதியின் ஒரு புறத்திலே இன்றுங் காணலாம். சரித்திரப் பிரசித்தி பெற்ற இவ்வாலயம் அற்புதக் காட்சி நிறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்டூர்**

மட்டக்களப்பிலிருந்து தெற்கே பத்தொன்பது மைல் தூரத்தில் வாவியின் மேற்குக் கரையிலே இன்னொரு பழம்பதியுளது. அது மண்டூர் எனப் பெயர் பெற்றுள்ள ஒரு சுப்பிரமணிய தலம். தில்லை மண்டூர் எனவும் அது வழங்கப்பெறும். மண்டு என்பது ஒருவகை மரம். பனை, தென்னை என்பவற்றின் இனம் போன்றது. இம் மண்டு மரங்கள் சூழ்ந்துள்ளதால் மண்டூர் என்பது பெயராயிற்று. மரத்தாற் பெற்ற பெயராகிய மண்டூர், தில்லை யென்னும் மரத்தாலும் பிரபலம் பெற்றுத் தில்லை மண்டூர் என வழங்கப்பெறுவதாயிற்று. இவ்வாலாற்றைச் சற்றே கூறக் கேளுங்கள்.

ஒரு நாள் மண்டூருக்கு அண்மையிலுள்ள காட்டகத்தே வேட்டைக்குச் சென்றனோர் வேட்டுவன். அவ் வெல்லையிலுள்ளதோர் தில்லைமரத்திலிருந்த வேலாயுதமொன்றைத் திருக்குறிப்பினாற் கண்டு கொண்டான். கண்டதும் கண்ணப்ப நாயனாரின் பிரிப்பில்லாத அன்பு நிலை அவனுக்கு உண்டாயிற்று. இதற்கு அறிகுறியாக அவன் பரம்பரையினர் கையிலே அம்பும் வில்லு மேந்தி அன்புருவாகிக் கண்ணப்ப நாயனாரைப் போல அவ்வேலாயுதத்தைக் காவல் செய்து வருவதை இன்றுங் காணலாம். தில்லை மரத்தில் வேட்டுவன் கண்ட திருவேல் ஆலயம் அமைத்துப் பிரதிட்டை செய்து பூசை செய்து திருவிழா நடத்தப்படும் தலமாதலால் மண்டூர் தில்லை மண்டூர் என்னுந் திருநாமம் பெறுவதாயிற்று. மௌனத்துக்கு இருப்பிடமான இத்திருப்பதியிலமைந்துள்ள ஆலயம் கதிர்காமத்தின் அமைப்பினைப் படம் பிடித்துக் காட்டுவது போன்ற தோற்றமுடையது. இங்கு மௌன பூசையே இடம் பெற்றுள்ளது.

**திருக்கோவில்:** மட்டக்களப்புப் பட்டினத்தின் தென்பாலில் ஏறக்குறைய ஐம்பது மைல் தொலைவிலுள்ளது **திருக்கோவில்** என்னும் சீரியபதி. இங்கே சித்திர வேலாயுத சுவாமி கோயில் என ஓர் ஆலயம் அமைந்துள்ளது. திருக் கோவில் என்பது சைவாலயங்களுக் கெல்லாம் பொதுப் பெயராயினும் இங்குள்ள ஆலயத்துக்கு இது சிறப்புப் பெயராயிற்று. திருக்கோயில் என்னும் ஆலயத்தின் பெயர் அவ்வாலயம் அமைந்த ஊருக்கும் காரணக் குறியாயிற்று. இங்குள்ள ஆலயம் கடலுக்கு மிகவும் அண்மையிலே யமைந்து அலைவாய்க் கரைக்கு அருகே யிருப்பதால் இதனைக் காணுந் தோறும் திருச்சீரலைவாய் என்கின்ற திருச்செந்தூர்த் திருப்பதியின் நினைவு நமக்கு வருகின்றது. மட்டக்களப்பு வழியாகச் செல்லுங் கதிர்காம யாத்திரீகர்கள் எல்லாரும் இத்திருக்கோயிலையுந் தரிசித்து அருள் பெற்றே செல்வர். இதன் திருவாகம் நன்கு நடைபெறுகின்றது.

**பழுகாமம்:** மண்டூருக்கு வடக்கே மூன்று மைல் தூரத்திலுள்ளது **பழுகாமம்** என்னும் பழம் பதி. இஃதொரு தமிழ்ப்பேரூர். இது கண்டியரசர்கள் நாட்டு வளையம் வரும்போது தங்குதற்கேற்ற வாசஸ்தலமாக அமைந்திருந்தமையால் சிங்காரக் கண்டி என முன்பு வழங்கப்பெற்று அதன் அரசியற் செல்வாக்கு விழ்ச்சியடைந்த பின்பு பழுகமம் என்னும் பெயருண்டாயிற்று. பாழடைந்த ஊர் என்னும் பொருளமைந்த பழுகாமம் என்னும் பெயர் வழக்கில் இருந்தாலும் இவ்வூர் பல வகை வளமும் பொலிந்து திகழ்கின்றது. இப்போதுள்ள ஊரின் புறத்தே கருங்கற் கட்டிடங்களின் சிதைவுற்ற பகுதிகளும், கருங்கற் கட்டில் முதலிய அரண்மனைப் பொருள்களும் காணப்படுவதால் இவ் ஆரின் புராதன நிலையை அறிந்துகொள்வதற்கு இவைகள் கருவியாகின்றன.

**கோட்டைக்கல்லாறு** மட்டக்களப்பின் தென்பாலில் 18 மைல் தூரத்திலே **கோட்டைக்கல்லாறு** என்னும் ஓர் ஊரைக் காணலாம். நாற்புறமும் மட்டக்களப்பு வாவி சூழ்ந்து இயற்கை யரணைப் பொருந்தியுள்ள இவ்வூரில் ஒல்லாந்தரால் அத்திவாரமிட்டு இடையிற் கைவிடப்பட்ட கோட்டையொன்று காணப்படுகின்றது. ஊரின் தென்புறத்து எல்லையாக அமைந்துள்ள வாவியிலே கற்பார் படர்ந்து காணப்படுகின்றது. ஊரிற் கோட்டையும் ஆற்றிற் கல்லும் அமைந்து கிடப்பதால் இது கோட்டைக் கல்லாறு என வழங்குவதாயிற்று. இதன் வடக்கினுந் தெற்கினுங் கிடக்கின்ற வாவிக் கூடாக மட்டக்களப்பு கல்முனை வீதி செல்கின்றது. மழைக்காலத்தில் இது இடையிடையே வெள்ளத்தாற் துண்டிக்கப்படும்போது பிரயாணத்துக்கு இடையூறு ஏற்படுவதும் உண்டு.

இவ்வாறு மட்டக்களப்பின்கண்ணுள்ள ஊர்ப் பெயர்கள் பலசிறந்த காரணங்களையுடையன. இக்காரணங்களையெல்லாம் ஆராய்ந்து அறிவது நல்லதோர் பொழுது போக்காகவும் சிந்தனைக்கு நல்விருந்தாகவும் பயன்படுவதாகும். இவைகளையெல்லாம் இலக்கிய வரலாறும், நாட்டுப் பாடல்களும், நாட்டுப் பழக்க வழக்கங்களும், கர்ணபரம்பரைக் கதைகளும், பிற ஆதாரங்களும் கருவியாகக் கொண்டு அறிவது நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் துணை செய்வதாகும். இந்நாட்டு நல்லறிஞர் குழாம் இவ்வாராய்ச்சியிலீடுபட்டு ஒரு நூல் வெளியிடுதற்கேற்ற நிலைமையை உண்டாக்குதற்கு அன்பு கூர்ந்து முன்வருமானால் நமது நாட்டுச் சரித்திரத்தை அறியும் வாய்ப்பு நமக்குக் கைகூடுமென எண்ணுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலந்தா சர்வகலாசாலை

'சரித்திரக்காரன்'

விடியற் காலம் கிழக்கு வெளுத்து வருகிறது. புள்ளினங்களில் கிலகிலாகார சப்தம். ஒரு கையிலே ஆடைகள் அடங்கிய பையும் மற்றொரு கையில் சிறு பாத்திரமும் எடுத்துக்கொண்டு, பலர் பல கட்டிடங்களினின்று புறப்பட்டு, ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்த் தேக்கங்களை நாடிச் செல்கின்றனர். நீராடச் செல்லும் இவர் ஒருவரா, இருவரா? இல்லை. ஆயிரத்து ஐந்நூற்றுப் பத்து பேர். இவர்கள் பல தேசங்களினின்று வந்தவர்கள்; பல மொழிகளைப் பயின்றவர்கள். தாங்கள் அரிதில் கற்றுப் பெற்ற ஞான பொக்கிஷத்தைப் பலருக்கும் மனப்பூர்வமாய் வழங்க வேண்டுமென்ற ஒரே இலட்சியங் கொண்டவர்கள். அவர்களுடைய நிமிர்ந்த நடையிலே பணிவும் அறிவு முகத்திலே அருளும் பொலியக் காண்கிறோம். ஆ! என்ன காட்சி! 1,800 ஆண்டுகளுக்குமுன் நாலந்தை சர்வ கலாசாலையில் நடைபெற்ற இந்தத் தினசரிக் காட்சியை, கற்பனைக் கண் படைத்தோர் இன்றும் காணலாம். இந்த ஆயிரத்து ஐந்நூற்றுப் பத்து ஆசிரியர்களிடத்தில் பதினாயிரம் மாணக்கர்கள் படித்தார்கள். அப்படிப்பட்ட சர்வகலாசாலை எது? எங்கிருந்தது? அதன் வரலாறென்ன? இவைகளைச் சிறிது ஆராய்வாம்.

நாலந்தை சர்வகலாசாலையானது, நில வளமும் அறிவு வளமும் நிரம்பப் பெற்ற மகத நாட்டில், தற்போது ராஜ்கிர் என்று கூறப்படும் இராஜகிருத நகரத்திற் கருகாமையில் திகழ்ந்து வந்தது. இந்தச் சர்வகலாசாலை எப்பொழுது தொடங்கப்பெற்றதென்பதை இன்னும் சரித்திரக்காரர்கள் நிச்சயித்துக் கூற முடியவில்லை. சிலர் கிறிஸ்து பிறப்பதற்கு 80 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டதென்றும், வேறு சிலர் கிறிஸ்து பிறந்து இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்டதென்றும் இப்படிப் பலவாறாக அபிப்பிராயந் தெரிவிக்கின்றனர். இக்கருத்து வேற்றுமைகளுக்குள் நாம் புகாது, இச்சர்வகலாசாலை எப்படி நடைபெற்றதென்பதை மட்டும் சுருக்கமாய்த் தெரிந்து கொள்வோம்.

இந்தச் சர்வகலாசாலைக்குள் ஆறு பெரிய கட்டிடங்கள் இருந்தன. ஒவ்வொரு கட்டிடத்திலும் ஒவ்வொரு கல்லூரி இருந்ததாகத் தெரிகிறது. இவை தவிர வேறு பல அழகிய கட்டிடங்களும் இருந்தன. இச்சர்வகலாசாலையை, செங்கற்களாலாய உயர்ந்த மதில் சுவர்கள் சூழ்ந்திருந்தன. கட்டிடங்களின் சிகரங்கள் மிக உயர்ந்தனவாகவும் சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பியனவாகவும் இருந்தன. மேல்மாடிகளின் அறைகளை மேகங்கள் மறைத்திருந்தன என்று செல்லப்படுவதால், இக்கட்டிடங்கள் பல மாடிகளைக் கொண்டு விளங்கினவென்று தெரிகிறது. ஆசிரியர்கள் வசிப்பதற்கு என்று தனித்தனியான கட்டிடங்கள் வெவ்வேறு இடங்களில் அமைந்திருந்தன. இவை தவிர, மாணக்கர்கள் இலவசமாய்ச் சாப்பிடுவதற்கென்று சத்திரங்கள் தனித்தனியே இருந்தன. இட்சிங்க என்ற சீன யாத்திரிகர் கூற்றுப்படி, இச்சர்வகலாசாலைக் கட்டிடத்திற்குள் எட்டு ஹால்களும் முந்நூறு அறைகளும் இருந்தனவென்றும், ஆசிரியர்களும் மாணக்கர்களும் ஸ்நானம் செய்வதற்கென்று பத்துக் குளங்கள் இருந்தனவென்றும் தெரிகின்றன. தினந்தோறும் காலையில் ஒரு பெரிய மணி அடிக்கப்படும். அதற்கு "ஸ்நான மணி" என்று பெயர். அப்பொழுது கும்பல் கும்பலாக மாணக்கர்களும் ஆசிரியர்களும் குளிக்கச் செல்வார்கள். கொரியா தேசத்துப் பிரயாணி ஒருவர், நாலந்தையைப்பற்றி வர்ணிக்கும் போது, நான்கு மூலைச் சதுரவடிவுடைய இந்தச் சர்வகலாசாலை, ஒரு நகரம்போல் விளங்குகிறதென்றும், இதன் கட்டிடங்கள் மூன்றடுக்கு மாடிகளைக் கொண்டனவாயிருக்கின்றன. வென்றும், ஒவ்வொரு மாடியும் பன்னிரண்டு அடி உயரமுள்ளனவென்றும், அழகிய சைத்தியங்களும் ஸ்தூபங்களும் இங்கே இருக்கின்றனவென்றும் கூறுகிறார். இக்கலாசாலையில் காலத்தைக் கணக்கிடும் நாழிகை வட்டில் ஒன்று இருந்ததென்றும் இதனைக் கொண்டு அவ்வப்பொழுது மணி அறிவிக்கப்பட்டதென்றும் தெரிகின்றன.

### ஹ்யூன்த்ஸாங்

சக்ராதித்யன், புத்தகுப்தன், ததாகத ராஜன், பாலாதித்யன் முதலாய ஆறு மன்னர்கள் தொடர்ந்தாற்போல் இச் சர்வகலாசாலைக்குப் பல கட்டிடங்களைக் கட்டிச் சேர்த்தார்கள். ஹ்யூன்த்ஸாங் என்ற சீனப் பிரயாணி, இக்கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த காலத்தில், இதன் நிர்வாகத்திற்கென்று நூறு கிராமங்கள் மானியமாக விடப்பட்டிருந்தன. ஒரு கிராமத்திற்கு இரண்டு பேர் வீதம் தினம் இருநூறு பேருக்கு அரிசி நெய், தயிர் முதலியன கொடுத்து வந்தார்கள். ஹ்யூன்த்ஸாங்குக்குப் பின்னால் வந்த இட்சிங் என்ற பிரயாணி, தன் காலத்தில், இச்சர்வகலாசாலைக்கு மானியமாக விடப்பட்டிருந்த கிராமங்கள் இருநூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிடுகிறான். இப்படிப் பல மன்னர்கள் இக் கல்வி நிலையத்துக்கு கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தும், நிலங்களை இனாமாக வழங்கியும் வந்தார்கள். ஹர்ஷ சிலாதித்யன் என்ற அரசன், இச்சர்வகலாசாலை எல்லைக்குள் நூறு அடி உயரமுள்ளதும் முழுவதும் பித்தளைத் தகடுகளினால் மூடப்பட்டதுமான ஒரு விக்கிரகத்தைக் கட்டிக்கொடுத்தான். கலாசாலைக்கண் அமைந்திருந்த சத்திரங்களில் மாணாக்கர்களுக்கு உண்டி, உடை, படுக்கை, மருந்து முதலியன இலவசமாக அளிக்கப்பட்டன. ஹ்யூன்த்ஸாங் அங்கே படித்துக்கொண்டிருந்த காலத்தில் 120 ஜம்பீரம் என்ற பழமும், இருபது பாக்கு, இருபது சாதிக்காய், ஒரு அவுன்ஸ் கற்பூரம், ஒரு பெக் அரிசி ஆகிய இவைகள் தினந்தோறும் அளிக்கப்பட்டான். இவை தவிர, மாதத்திற்கொருமுறை மூன்றுபடி எண்ணெயும், தினப்படி வேண்டிய நெய் முதலிய உணவு வகைகளும் கொடுக்கப்பட்டான். ஆசிரியர்களுக்கும் இதேமாதிரி நடந்து வந்தது. இதனால் ஆசிரியர்களும் மாணாக்கர்களும் எவ்வித மனக்கவலையுமின்றி முறையே கற்பித்தும் கற்றும் வந்தார்கள். இது தவிர கலாசாலையைப் பார்ப்பதற்கும், வேறு அலுவலாகவும் வரும் விருந்தினரும் மிக அன்புடன் உபசரிக்கப்பட்டனர்.

நாலந்தை சர்வகலாசாலையில் படிப்பதற்கென்று உலகத்தின் நானாபக்கங்களிலிருந்தும் மாணாக்கர்கள் வந்து குழுமினார்கள். ஹ்யூன்த்ஸாங் காலத்தில் இக் கலாசாலையில் பதினாயிரம் மாணாக்கர்களும், ஆயிரத்து ஐந்நூற்றுப் பத்து ஆசிரியர்களும் இருந்தார்கள். இங்கே படித்த மாணாக்கர்கள் சிலர், தங்களுடைய உழைப்பினாலும் திறமையினாலும் பிற்காலத்தில் இதே கலாசாலையில் ஆசிரியர்களாகவும் தலைமையாசிரியர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள். இப்படி விளங்கியவர்களுள் தர்மபாலர் என்றவர் ஒருவர். இவர் தென்னிந்தியாவிலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். அங்கிருந்து நாலந்தைக்கு வந்து நன்கு பயின்று பிற்காலத்தில் அதன் அத்தியட்சகராகவும் ஆனார். இவர் தருக்க சாஸ்திரத்தையும் இலக்கணத்தையும் கரை கண்டவர். இவரிடம் பயின்ற சீலபத்திரன் என்பார், இவருக்குப் பிறகு நாலந்தையின் அத்தியட்சகராக விளங்கினார். இவரிடத்திலேயே ஹ்யூன்த்ஸாங் என்பார் சமஸ்கிருதம் பயின்றார். இங்கு திகழ்ந்த ஆசிரியர்களின் பெயர்களே நமக்கு ஒருவித பக்தியை உண்டுபண்ணுகின்றன. நாகார்ஜுனன், கமலசீலன், திபாங்கரன், வீரதேவன், ஆரியதேவன், ஆர்ய அஸங்கன், வசுபந்து, தர்மபாலன், சீலபத்திரன், ஸ்திரமதி, சந்திரகோபன், சாந்தரட்சிதன், பத்மசம்பவன், விநீபிதேவன், புத்தகீர்த்தி, குமாரஸ்ரீ, கர்ணஸ்ரீ, சூரியத்வஜன், சுமதிசேனன், பிரபாகரமித்திரன், ஞானசந்திரன், சீக்கிர புத்தன் முதலியோருடைய பெயர்களே எவ்வளவு அருமையாக இருக்கின்றன! இவர்கள் கல்விக் கடலைக் கடந்தவர்கள். பல நூல்களை இயற்றியிருக்கிறார்கள். இந்நூல்கள் சிலவற்றின் கையெழுத்துப் பிரதிகள் இப்பொழுதும் சில புத்தகசாலைகளில் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**உயர்தரக் கல்வி**

இக்கலாசாலையில் உயர்தரப் படிப்பே சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தது. யோகம், தர்க்கம், தத்துவம் முதலியவைகள் இங்கு விசேஷ பாடங்களாகப் போதிக்கப்பட்டு வந்தது. இக்கலாசாலையில் வந்து சேர விரும்பும் ஒவ்வொரு மாணாக்கனும் முதலில் பரீட்சிக்கப்பட்டான். இப்படிப் பரீட்சிக்கும் ஆசிரியருக்கு "துவார பண்டிதர்" என்று பெயர். இந்தப் பண்டிதர், வரும் மாணாக்கர்களுக்குப் பொதுவாகச் சில கேள்விகளையும் சிறப்பாக அவர்கள் எந்த விஷயத்தை விசேஷ பாடமாக எடுத்துக்கொண்டு உயர்தர ஞானத்தைப் பெறவேண்டுமென்று விரும்புகிறார்களோ அது சம்பந்தமான சில கேள்விகளையும் போட்டு, அவர்களுடைய அடிப்படையான அறிவு எவ்வளவு இருக்கிறதென்பதை ஒருவாறு தெரிந்து கொண்டார். இந்தக் கடினமான பிரவேச பரீட்சையில் பத்து பேருக்கு இரண்டு அல்லது மூன்றுபேர் வீதமே தேறினர். இந்தப் பரீட்சையைத் தற்காலத்து பிரவேச பரீட்சை (Entrance Examination) க்குச் சமமாகச் சொல்லலாம். இந்தப் பரீட்சையில் தேறியவர்களின் பெயர்களே சர்வகலாசாலைப் புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளப்பெற்றன. இந்தப் பரீட்சைகள் நடத்துவதற்கென்று நியமிக்கப்பட்ட துவார பண்டிதர்கள் ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் வல்லுநர்களாகவிருக்க வேண்டியது அவசியமாயிருந்தது. நாலந்தை சர்வகலாசாலையில் ஒரு துவார பண்டிதரும் விக்கிரம சீலத்துச் சர்வகலாசாலையில் ஆறு துவார பண்டிதர்களும் இருந்தார்களென்று தெரிகிறது.

நாலந்தை சர்வகலாசாலையில், ஆசிரியர்கள், குறித்த ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டு உபந்நியாசங்கள் மூலமாக மாணாக்கர்களுக்குப் போதனை செய்து வந்தார்கள். இந்த மாதிரியான உபந்நியாசங்கள் தினந்தோறும் நூற்றுக்கு அதிகமாக நடைபெற்று வந்தன. இவை தவிர, ஆசிரியர்களும் மாணாக்கர்களும் அடிக்கடி சந்தித்து ஏதாவது ஒரு பிரச்னையைக் கிளப்பி வாதம் செய்வார்கள். இதன் மூலமாகவும் மாணாக்கர்களின் அறிவு அதிகப்பட்டு வந்தது. மற்றும் மாணாக்கர்களுக்குள்ளேயே அடிக்கடி தர்க்கப் போட்டிகள் நடைபெற்று வந்தன. இந்த வாதப் போட்டிகளைக் காணவும் இவைகளில் கலந்துகொள்ளவும் வெளியிடங்களில்

(31 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ மக்கள் உழுதுண்டு வாழ்ந்த உருத்திரபுரம்.

# காட்டு மத்தியில் பழைய உருத்திரபுரச் சிவாலயம்

திரு. க. சோமசுந்தரம், கிளிநொச்சி

சைவப் பெருமக்கள் உழுதுண்டு வாழ்ந்த உருத்திரபுரம் சிவாலய கும்பாபிசேகம் 27.8.58 அதிகாலே நடைபெற்றது. இந்தச் சிவாலயம் சோழர் காலத்தைச் சேர்ந்ததெனை நம்பப்படுகின்றது. இச்சிவாலயத்தில் உள்ள ஆவுடையார் சதுர வடிவமானது. அதுவும் மூன்று பிரிவாக உள்ளது. இந்த மூன்று பிரிவையும் பிரம பாகம், விஷ்ணு பாகம், உருத்திரபாகம் என அறிஞர்கள் கூறுகின்றார்கள். புறமத சூட்சியினர் படை எடுப்பின் போது இந்தச் சிவாலயமும் இடித்து அழிக்கப் பட்டுள்ளதென தெரிகின்றது. இந்த ஆவுடையாரைப் போல் பொலநறுவைச் சிவாலயத்திலும் உண்டு. இந்தியாவிலும் உண்டெனக் கூறுகின்றனர். பிற்காலத்தில் லிங்கத்திற்குரிய ஆவுடையார் அரசமிலே வடிவமாக சிற்பாசிரியர்களால் அமைக்கப்பட்டதென அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

உருத்திரபுர சிவாலயம் பழைமையும் பெருமையும் வாய்ந்தது. இச்சிவாலயத்திற்குப் பக்கத்தில் உள்ள நீர்ப்பாய்ச்சுங் குளத்திற்கு "உருத்திரப்பெருங்குளம்" எனப் பெயருண்டு. இது டச்சுக்காரரது இலங்கைப் படத்தில் குறிக்கப்பட்டுள்ளது. நடுக்காட்டின் மத்தியில் இடிந்து சிதறுண்டு கிடக்கும் செங்கட்டிகளும், கருங்கற் தூண்களும் இச்சிவாயலத்தின் பழமையைக் கூறுகின்றது. இக்குளத்தில் அல்லி மலர்களும் தாமரை மலர்களும் நிறைந்து கோவிலே அழகுபடுத்துகின்றன.

உருத்திரபுரச் சிவாலயம் இடிந்து அழிக்கப்பட்ட பின் குறித்த ஆலயத்தில் உள்ள சிவலிங்க ஆவுடையாரை கமக்காரர்கள் புறமதத்தவர்களின் கண்ணுக்குத் தெரிய விடாமல் வண்டிகளிலேற்றி **குஞ்சுப் பரந்தனில்** உள்ள **பொறிக்கடவை அம்மன் கோவிலில்** சேர்த்து இற்றைவரை பாதுகாத்து வந்தனர். இது ஏறக்குறைய நூறு வருடங்களுக்குமுன் நடைபெற்றதாக அறியக் கிடக்கின்றது.

உருத்திரபுர சுற்றுப்புறத்தில் உள்ள மக்கள் இடையிடையே குறித்த சிவாலயம் இருக்கும் காட்டிற்குச் சென்று தேங்காயடித்து கற்பூராதனே செய்து வழிபட்டு வந்துள்ளதாக முதியோர்கள் உறுதியாக சொல்லுகின்றனர்.

**ஸ்தலமும் அதற்குச் செல்லும் மார்க்கமும்.** யாழ்ப்பாணம் கண்டி றேட்டில் கிளிநொச்சிப் பகுதியிலடங்கிய கறடிப் போக்கு என்னுமிடத்திலிருந்து பிரிந்து 10 ம் வாய்க்கால் செல்லும் ரெயிலர் வீதியால் ஏறக்குறைய 5 மைல் தூரம் சென்றால் உருத்திரபுர கிராமத்தை அடையலாம். அதிலிருந்து 2 மைல் தூரம் மண்றேட்டில் சென்றால் மேற்படி ஸ்தலத்தை அடையலாம். கறடிப்போக்கிலிருந்து உருத்திரபுரம் செல்லும் 5 மைல் தூரம் தார் போடப்பட்ட றேட்டு என்பதும் நாளாந்தம் 3 பஸ் சேவைகள் உண்டென்பதும் குறிப்பிடத்தக்கது.

பழமை பொருந்திய உருத்திரபுரச் சிவாலயம் உருப்பெறவேண்டுமென விரும்பிக் குறித்த சிவாலய மைதானத்தை அடுத்து ஒரு சிறு குடிசை அமைத்து கொண்டார் திரு. சுப்பிரமணியம் வேலாயுத சுவாமி அவர்கள். இவர் ஒரு என்புருகும் பக்திவான். பக்தியின் மேன்மையாலே தன் உடலேயும் உயிரையும் மதியாது கொடிய மிருகங்கள் வசிக்கும் காட்டில் இரவு பகலென்று கவனியாது தமது குடிசைக்கு வருவதும் போவதுமாயிருந்து வந்தார். இதையடுத்து திரு. சு. வேலாயுதசாமி அவர்கள் சிலகாலம் உபவாசமிருந்தார். இவரது விடாப்பிடியான பக்தி வைராக்கியத்தை நிரூபிக்க அனுசரித்து ஸ்ரீ. க. வடிவேலு சுவாமி அவர்களது வேண்டுகோளின்படி கிளிநொச்சி திருநெறிக் கழகத்தின

(27 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இயற்கை வளம்—ஏரிகள்

**திரு. வை. முத்துக்குமாரசுவாமி**—வானொலிப் பேச்சு

உலகில் உள்ள நாகரிகத்தில் சிறந்த ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு காரணத்திற்காகப் புகழ் பெற்றிருக்கிறது. எகிப்து தேசம் அங்கு உள்ள பாரிய பிரமிட்ஸ் எனப்படும் கூர்நுதிக் கோபுரங்களுக்குப் பெயர் போனது. மொசொட்பொற்றேமியா அங்குள்ள களி மண்ணால் செய்யப்பட்ட கல்வெட்டுகளுக்குப் புகழ் வாய்ந்தது. சீன நாடு திசையறியுங் கருவி, அச்சுக் கருவி, வெடி மருந்து, பீங்கான் கோப்பை, பட்டு ஆடை, புதினப் பத்திரிகை போன்ற தற்காலப் பொருட்களைக் கண்டு பிடித்தற்கு முன்னோடியாக இருந்த காரணம் பற்றி இதன் புகழ் விளங்கிற்று. பாரத தேசம் அங்கு காணப்பட்ட தென்மொழி, வடமொழிகளில் எழுதப்பட்ட மறைகளினாலும் அந்நாட்டில் உள்ள அருங்கலைகளினாலும் புகழ் மிகுந்து விளங்கியது. அவ்வாறே நமது இலங்கையின் பண்டைச் சீரும் சிறப்பும் அதன் ஏரிகளில் தங்கியிருந்தது என்று கூறுதல் மிகையாகாது. யோன் ஸ்ரில், பிரோகியர் என்னும் நூலாசிரியர்கள் "இலங்கை நாகரிகத்திற்கு ஏரிகளே தலைசிறந்த சேவை புரிந்துள்ளன" என்று தமது இலங்கையைப் பற்றிய நூல்களில் அறிவுறுத்தியிருக்கின்றார்கள். ஸேர் இமேசன் ரெனென்ற் என்னும் சரித்திர ஆசிரியர் இலங்கை ஏரிகளின் தொகை கணக்கிடுதற் கரியது என்று கூறுகிறார்.

**மின்னேரி**

மின்னேரி, கந்தளாய், காவைவாவி, பராக்கிரம சமுத்திரம் கட்டுக்கரைக்குளம் ஆய ஏரிகளைத் தரிசித்தீர்களானால் இந்நாட்டின் பண்டைச் சிறப்புக்கு இவை எப்படி உதவி செய்தன என்பது உங்களுக்குப் புலப்படும். வரப்புயர என்று கூறி வரம்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குறி உயரக் கோன் உயரும் என்று ஔவையார் விளக்கினார். இலங்கை ஏரிகளைப் பொறுத்த மட்டில் இது மெத்தப் பொருத்த மானதாகத் தோன்றுகின்றது. இலங்கையின் ஈடும் இணையும் இல்லாத ஏரி மின்னேரி எனப்படும் ஏரியாகும். மின்னேரி இயற்கை எழில் மிகுந்தது. இவ்வேரியின் அணைகளுக்கு அடுத்து பச்சைப் பசேலெனப் புல் முளைத்து நிற்கும் காட்சி இரம்மியமாக இருக்கிறது. இதன் சுற்றளவு 20 மைல்கள். இது 20,000 ஏயற் பாத்திகளுக்கு நீர்ப்பாய்ச்சப் போதிய நீர் உள்ளது. இந்த ஏரியின் ஒரு பக்கத்திலே உள்ள காட்டிலே மலை வேம்பு, முதிரை, கருங்காலி முதலிய வைர மரங்கள் காணப்படுகின்றன. இக் நாட்டின் பின்னணியிலே மாத்தளைப் பகுதி மலைகள் மாட்சியாகக் காட்சி அளிக்கின்றன. மின்னேரியா ஏரியை மனிதன் செய்துள்ளான் என்று கற்பனை செய்யவும் முடியாது. இங்கு நாம் சென்றால் தற்கால நாகரிகத்தின் சின்னங்களான ஒலிபெருக்கிகளின் அலறல்களினின்றும் மோட்டார், பஸ் வண்டிகளின் இரைச்சல்களினின்றும் விடுதலை அடைந்து ஆறுதல் பெறலாம். சாந்திக்கு நிலைக்களமாக மின்னேரி விளங்குகிறது. இது ஏறக்குறைய 1,600 ஆண்டுகளுக்கு முன்னர் கி. பி. 334 ம் ஆண்டுக்கும் கி. பி. 362 ம் ஆண்டுக்கும் இடையில் இலங்கை மன்னன் மகாசேனனால் அமைக்கப்பட்டது. அம்பன் கங்கையின் நதி ஓட்டத்தை மின்னேரியா ஏரிக்குப் பாயும்படி செய்வித்தான் அம்மன்னன். தல்வத்து ஓயாவுக்கு ஊடாக மாபெரும் அணைக்கட்டைக் கட்டி, நீர்ப்பாசனம் செய்வித்து விவசாயத்தை விருத்தி செய்தான். மின்னேரியாவின் அணைக்கட்டு 24 மைல் நீளமும், 40 அடி முதல் 90 அடி வரை உயரமும் உள்ளது. இவ்வேரி கி.பி. 1153 ம் ஆண்டு மகா பராக்கிரமவாகு மன்னனால் திருத்தி அமைக்கப்பட்டது. இவ்வேரியை அமைத்த மன்னன் மகாசேனனை அவனுக்குப் பிற்காலத்துக் கிராம மக்கள் மின்னேரி யாண்டவன் என்று, அதாவது ஓர் தெய்வமாகக் கொண்டாடி வருகின்றனர்.

மின்னேரியா ஏரிக்கு அண்மையில் உள்ள மக்கள் உண்மையில் பாக்கியசாலிகள். இங்கு சூரிய உதயமும் சூரியன் மறைவதும் ஆகிய இயற்கைக் காட்சிகள் உலகில் உள்ள அழகான காட்சிகளில் ஒன்றாகும். வான வில்லின் சப்த நிறங்களும் இவ்வேரியின் நீரில் வாழும் வாத்துக்கள், நாரைகள், கொக்குகள், மீன் கொத்திகள், பருந்துகள், ஆந்தைகள், வேறு நீர்ப் பூச்சிகளைப் பிடிக்கும் எத்தனையோ பட்சிசாலங்கள் தங்கள் கண்ணைக் கவரும் வண்ண இறகுகளுடன் மின்னேரியா ஏரியில் நூற்றுக் கணக்காகக் காணப்படுகின்றன. நீல மணி நீர் உள்ள ஏரிக்குள், மீன் தொடக்கம் முதலை வரை எவ்வளவு தொகை வகையான நீர்ப் பிராணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபத்தில் உள்ள காட்டில் யானை, புலி, முள்ளம் பன்றி, கரடி, எருமை, மான், மரை, குரங்கு முயல் முதலியன நடமாடுகின்றன. மின்னேரியாக் குடியேற்றத்திட்டத்திலே 20,000 ஏக்கருக்கு நீர்ப் பாய்ச்சப்பட்டு வருகின்றது. மக்களின் முயற்சியால் காடு நாடாக மாறி வருகின்றது. 1951ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞானக் கலாச் சார ஸ்தாபனம் (யூனெஸ்கோ) இங்கு அடிப்படைக் கல்விப் பயிற்சி நிலையத்தை அங்குரார்ப்பணம் செய் துள்ளது. இப்பகுதியிலே ஹிங்குறக்கொடை விடு திச்சாலைக்கு அணித்தாக மெடிரிகிரியா என்னும் பண்டைச் சரித்திரப் பெருமை வாய்ந்த அழிந்த பௌத்த விக்கிரகம் இருந்த கட்டடம் உண்டு.

**காளவாவி**

மின்னேரியாவுக்கு அடுத்த சிறந்த ஏரி காளவாவி யாகும். இந்த ஏரி "யோதஎல" என்னும் 54 மைல் நீளமான வாய்க்காலுடன் தொடுக்கின்றது. இக் காளவாவியும், பலாலுவாவியும், தம் அகத்தே தம்புல்லஓயா, மிரிஸ்கொனி ஓயா என்னும் இரு நதிகளின் நீரை அடக்கியுள்ளது. இவ்விரு குளங் களும் 4425 ஏக்கர் அல்லது 7 சதுர மைல் பரப்பு நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சக் கூடிய நீர் உள்ளது. காள வாவியின் மேற்குப்பக்கத்தே உள்ள அணைக்கட்டு ஆறு மைல் நீளமும் 20 அடி அகலமும், ஏறக் குறைய சராசரி 60 அடி உயரமும் உள்ளது. ஒவ் வோரிடங்களில் இது 80 அடி தொடக்கம் 90 அடி உயரம் உள்ளது. காளவாவி யோதஎல ஜெயகங்கா என்னும் நதிகளின் நீரைத் தன் அகத்தே அடக்கு கின்றது. காளவாவியை 1888ல் அரசாங்கம் நீர்ப் பாசனத்துக்கெனத் திருத்தி அமைத்தது. யோத எலாவில் சமீபத்தில் நீர்ப்பாசனத்திற்கான புதிய வசதிகள் அரசாங்கத்தாரால் செய்து முடிக்கப் பட்டு இருக்கிறது. காளவாவியில் உள்ள ஒரு வாய்க்கால் அனுராதபுரத்து திசை வாவியுடன் தொடுக்கிறது.

காளவாவி அணைக்கட்டைக் கட்டத் தொடங்கும் அந்த இடத்தில் ஐம்புலன் ஒடுங்கி யோகத்தில் இருந்த ஒரு பௌத்த தபசியைச் சிறிதும் இரக்க மின்றி தாதுசேனன் என்னும் சிங்கள மன்னன் அவ்வணையினுள் இட்டு மூடிக் கட்டுவித்தான். "பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் தமக்கின்னா பிற் பகற்றுமே வரும்" என்று திருவள்ளுவர் கூறியபடி இப்பழி இம் மன்னனைத்தொடர்ந்தது. தாதுசேன னுக்கு இரண்டு மக்கள்: மோகலானன், காசியப்பன் என் பவர்கள்—இரு மனைவியருக்குப் பிறந்தவர்கள். தனது மகளுக்கு தாதுசேனன் அவனுடைய மருக னாகிய சேனாதிபதியை மணம் முடித்து வைத்தான் சேனாதிபதியாகிய மருகன் தாதுசேனன் மகளைத் தொடையில் சவுக்கடி அடித்து இரத்தம் சொட்டும் படி இம்சை செய்ததால் இவன் சீற்றமுற்று அவனது தங்கையும், மருகனின் தாயாருமாகியவளைத் தீயில் இட்டு எரித்தான். ஆகவே மருகன் சினங்கொண்டு தாதுசேனன் ஏதோ பொருள் ஒளித்து வைத்திருக் கிறான் என்று காசியப்பனிடமும் மோகலானனிடமும் எடுத்துக்கூறினான். இதனைத் தரும்படி, தாதுசேனனை அவன் மக்கள் கேட்டனர். தாதுசேனனிடம் அச் சுறுத்தி இப்பொருளைப்பெற எண்ணிய காசியப்பன் அவனை உடைந்த தேரில் இருத்திச் செலுத்தி அவனைப் பொருள் உள்ள இடத்தைக் காட்டும்படி ஏவினான். தாதுசேனன், தமது மாமனும் மகா வம்சம் எழுதிய மகாநாமா என்னும் பௌத்த குருவைச் சந்தித்து அவருடன் விருந்து உண்டு உரையாடிவிட்டு-காளவாவிக்குச் சென்று நீராடினான். நீராடிக்கொண்டு தாதுசேனன் காசியப்பன் ஆட்களி டம் "நண்பர்களே இக்காளவாவியும் இதனை அமைத்ததினால் பெற்ற விவசாயப் பலனுமே— எனது திரவியங்கள்" என்று கூறினான். இதைக் கேட்ட காசியப்பன் மிகச் சினந்து இவனைச் சங்கிலி யால்கட்டி காளவாவியின் அணைக்கட்டின் ஒரு பகு தியில் நிறுத்தி மண் மூடுவித்தான். காளவாவி மதகுக்குச் சமீபத்தில் "ஔவுக்கான விகாரை" உண்டு. இங்கு உள்ள பிரமாண்டமான புத்த விக் கிரகம் 33 அடி 3" உயரம் உள்ளது. இவ்வாவிக்கு அண்மையில் விசித்திரபுரம் உள்ளது. இது எல் லாளன் கோட்டையாக இருந்தது. அம்பன்கங்கை, காளவாவி, மின்னேரி, கவுடெலவாவி, கந்தளாய் என்னும் ஏரிகளுக்கு நீர் உதவுகின்றது. பொலனறு வையில் உள்ள தோப்பவாவி கி. பி. 370ல் உபதி மன்னனால் அமைக்கப்பட்டது. பராக்கிரம சமுத்திரம் என்று வர்ணிக்கப்படும் மாபெரும் நீர்ப்பரப்பு தோப வாவியுடன் தொடுக்கப்பட்டுள்ளது. இது கொழும்புத் துறைமுகத்திலும் பெரியது. இதன் சுற்றளவு 120 மைல். இதன் அணைக்கட்டு $3\frac{1}{2}$ மைல் நீளமுள்ளது. இதன் ஆழம் 52 அடி. அங்கமெடில, யோதஎல என்னும் வாய்க்கால்களும் அம்பன் கங்கை நீரும் தோப்பவாவியில் சங்கமிக்கின்றன. இந்த ஆறுகள் பேரொலியுடன் ஒன்று சேர்ந்து பாய்கின்றதை இங்கு நாம் கண்டு அதிசயிக்கலாம். பராக்கிரமவாகு மன்னன் "மனிதருக்கு உபயோகப்படாமல் ஒரு சிறிய துளி நீரும் வீணாகப் பாயவிடக்கூடாது" என்று கூறினான். இவனே பராக்கிரம சமுத்திரம் என்னும் ஏரியை அமைத்து விவசாயத்தை அபிவிருத்தி செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கந்தளாய்க் குளம்

கிழ்மாகாணத்தில் உள்ள வாவிகளில் தூகம் குளமும், அல்லைக்குளமும், கந்தளாய்க் குளமும் பிரதானமானவை. திருக்கோணமலைக்குத் தென் மேற்கே, 26 மைல்களுக்கு அப்பால் கந்தளாய் என்னும் ஏரி அமைக்கப்பட்டிருக்கிறது. அது 3500 ஏக்கர் நிலப்பரப்புக்கு நீர் உதவுகிறது. பழைய குளம் ஒன்று, வேந்தராயன் குளம்—வேந்தராயன் குளம் கந்தளாய்க் குளத்துடன் இணைக்கப்பட்டிருக் கின்றது. கந்தளாய்க் குளத்தின் சுற்றளவு 5 மைல். அதன் அணைகள் $1\frac{1}{4}$ மைல் நீளமும் உயரம் 70 அடியுமாகும். 17,000 அமணவிதைப்பாடுள்ள நிலத் துக்கு இது நீர் கொடுக்கின்றது. கந்தளாய்க் குளத் தை அமைத்தற்கு ஆயிரம் ஆட்கள் மூன்று தொடக்கம் ஐந்து ஆண்டுகள் வரை வேலை செய் திருக்கலாம் என மென்டிஸ் சரித்திராசிரியர் கணக் கிட்டுள்ளார். கந்தளாய்க் குளக்கட்டுக் காவியம் என்னும் ஏடு மட்டக்களப்பைச் சார்ந்த சம்பூரில் இருந்தது. இதனைப்பெற்று எனது தந்தை யாழ்ப் பாணம் நாவலர் அச்சுக்கூடம் அதிபர் க. வைத்தி லிங்கம் அவர்கள் அச்சுவாகனம் ஏற்றினார். அந்த ஏட்டில் உள்ள செய்யுள் ஒன்று இக்குளத்தை அமைத்தவரைப்பற்றிக் குறிக்கின்றது. அது பின் வருமாறு :—

> கருதி முறை தவறாத மனு நீதி கண்டன்
> சோழனுதவுங் குமார சோழ வெங்காளன்
> பரிதிகுல மன்னன் குளக் கோட்டிராமன்
> பணடுபூ தப்படையைக் கொண்டேதான்
> கருதரிய மண்ணும் சுமப்பித்துக்
> கடலும் மலையும் போலவே குளங்கட்டி
> வருஷமிகு செந்நெல் விளையப் பன்னிரண்டு
> மாதமும் புனல்பாய் மதகு செய்தனரே.

மற்றவர்க்கும் எண்ணுதற்கும் செய்தற்கும் அரிய கந்தளாய்க் குளமும் சுவாமி மலைக்கோவிலும் கோட் டமும் மன்னன் செய்தமையால் குளக்கோட்டு மன்னன் எனப்பட்டான். கந்தளாய்க் குளத்திற்கு அண் மையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டின்படி இது 4 ம் நூற்றாண்டில் இருந்த மகாசேனனால் கட்டப்பட்டது. ஆயினும் மகாவம்சத்தில் கந்தளாய் மகாசேனனால் கட்டப்பட்டது எனக் கூறப்படவில்லை. குளக்கோட்டு மன்னன் 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த சோழ மன்னன். நீர்ப்பாசனத்திற்காக இம்மன் னனே முன்னரே கட்டப்பட்ட கந்தளாய்க் குளத்தை விசாலித்தான் என்று கூறுதல் ஏற்றதாகும். கோணேசர் கல்வெட்டும் திருக்கோணசல புராணமும் குளக்கோட்டு மன்னன் 5ம் நூற்றாண்டில் வாழ்ந்த தாகக் கூறுகின்றன. கந்தளாய்க் குளத்துக்குச் சமீபத்திலே திருக்கோணமலைக்குத் தென்மேற்கே 20 மைலுக்குச் சமீபத்தில் பாலாமோட்டை என்னும் ஓர் அழிந்தநகரம் உண்டு. அங்கு பழைய சிவன்கோவி லின் அழிவுகளைக் காணலாம். அங்குள்ள கல்வெட்டு தமிழிலே உள்ளன. அவை 11ம் அல்லது 12ம் நூற் றாண்டைச் சேர்ந்தன. அச்சிவன் கோவிலின் பெயர் தென்கைலாசம் அல்லது விஜயராஜ ஈசுவரம். பிராமணர் இங்கு இருந்தனர். இது சதுர்வேத பிரமபுரம் என அழைக்கப்பட்டது என்று கல் வெட்டுச் செப்புகின்றது. கந்தளாய்க் குளத்துக்குச் சமீபத்தே விஷ்ணு விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டது.

அநுராதபுரத்துக்குத் தென்கிழக்கே ஒரு மைல் அண்மையில் உள்ள நுவரவாவி 60 மைல் நீள முடைய ஒரு கால்வாயால் பல கிராமங்களுக்கு நீர்ப்பாய்ச்சுகின்றது. இது வட்டகாமினியால் 1 ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. அது நீர் சேகரித்துக் கொடுக்கும் பரப்பு 27 சதுர மைல்கள். அது 36,049 ஏக்கர் பரப்பு நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சு கின்றது.

### கட்டுக்கரைக்குளம்

வன்னிக்காடு ஒரு காலத்தில் செந்நெற் கழனிகள் உள்ள நாடாக விளங்கியது. வடமாகாணத்தில் உள்ள வவுனியாக் குளம் எல்லாள மன்னனால் அமைக்கப்பட்டது என்பர். அது முன்பு பவானிக்குளம் எனப்பட்டது. இம்மாகாணத்தில் உள்ள கட்டுக்கரைக் குளம், "பூதம் கட்டிய குளம்" எனப்படும். அது 8 சதுர மைல் விசாலமுடையது. அதிலுள்ள நீர் 10 லட்சம் பரப்புக்கு நீர்ப்பாய்ச்சி நெல் விளை வித்தற்குப் போதியதாம். இது விஜயன் காலத் துக்கு முன் நாகர்களால் அமைக்கப்பட்டது என்பர்.

தென் மாகாணத்தில் உள்ள குளங்கள் திசை மகாராமக்குளம் மகாவிந்தைக்குளம் என்பன.

வடமேற்கு மாகாணத்தில் உள்ள குளங்கள் முந்த தல்வாவி, மகாகாவியவாவி, மகாவாவி என்பன. வடமத்திய மாகாணத்திலே உள்ள குளங்கள் களா வாவி, மின்னேரியா, பசவக்குளம், அபயவாவி, நுவரவாவி என்பன.

கடலேரிகள் வலப்பிட்டி ஏரி, இதரகாம ஏரி, கொக்கலால் ஏரி என்பன.

நம் நாட்டின் உணவுக்கு இங்கு விளைவிக்கப்படும் நெல் மூன்றில் ஒரு பங்கு மட்டிலேயாகும். ஆண்டு தோறும் பர்மாவுக்கும், சீனாவுக்கும் பன்னிரண்டு

(26 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநகாரிக தர்மபாலர்.

# அநகாரிக தர்மபாலர்

திரு. அ. ந. கந்தசாமி

" நல்லை நகராறுமுக நாவலர் பிறந்திலரேல்

சொல்லு தமிழெங்கே, சுருதியெங்கே" என்று நாவலர் பெருமான் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த தொண்டைப் பாராட்டிப் பாடினார் ஈழத்துத் தமிழ்ப் புலவர் ஒருவர். இதே போல, தென்னிலங்கையில் பாடப்பட வேண்டியவர் அநகாரிகத் தர்மபாலர் என்ற பெரியாராவர். அவர் பிறந்திருக்காவிட்டால் தேரவாத பௌத்தமும் சிங்கள கலாசாரமும் இருந்த இடம் தெரியாது அழிந்துபோயிருக்கலாம். அவை எங்கேயென்றுதான் நாம் கேட்க வேண்டியிருந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..........



நாவலருக்கும் அநகாரிகருக்கும் பல ஒப்புமைகள் உண்டு. இருவரும் அன்னிய மதத்திலிருந்தும், அந்நிய மக்களின் கலாசாரத்திலிருந்தும் தமது இனத்தைக் காப்பாற்றினர். இருவரும் பிரமச்சரிய விரதத்தை மேற்கொண்டு தமது வாழ் நாளைப் பொதுமக்கள் நலனுக்காக அர்ப்பணித்தார்கள்.

### பிறப்பு

அநகாரிக தர்மபாலர் என்பது துறவுப் பெயர். இயற்பெயர் வேறு. டேவிட் ஹேவாவிதாரனே என்ற இயற்பெயருடன் கூடிய இவர் 1864 ம் ஆண்டில் செப்டெம்பர் 17 ந் தேதியன்று இவ்வுலகில் அவதரித்தார். 68 ஆண்டுகள் செயற்கரும் சேவைகள் பலவற்றைச் செய்த பின்னர் இப்பெரியார் 1933 ம் ஆண்டு ஏப்ரில் 29 ந் தேதியன்று பூதவுடல் நீங்கிப் புகழுடம்பெய்தினர்.

சிங்கள மக்களின் சரித்திரத்திலே ருஹுணு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி. பல தேசிய வீரர்களையும், சிங்களக் கவிஞர்களையும் ஈழநாட்டுக்கு ஈன்று கொடுத்த பெருமையுடையது ருஹுணு. இந்த ருஹுணு பிரதேசத்திலே மாத்தறைப்பகுதியிலே பெரும்புகழோடு விளங்கிய குடும்பங்களில் முதலியார் டொன் கரோலிஸ் ஹேவாவித்தாரணேயின் குடும்பமும் ஒன்று. இக்குடும்பத்திலே முதலியார் டொன் கரோலிஸ் ஹேவாவித்தாரணேக்கும் மல்லிகா குணவர்த்தன அம்மையாருக்கும் புதல்வராக டேவிட் ஹேவாவிதாரணே அவதரித்தார். அவருடன் கூடப்பிறந்தவர்கள் மூவர். அவர்களில் இருவர் ஆண்களும் ஒருவர் பெண்ணுமாவர்.

இளஞ்சிறுர் டேவிட் அக்காலத்துப் பணக்காரச் சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த இதர சிறுவர்கள் எல்லாரையும் போலவே கிறிஸ்தவ ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிலேயே படிக்கவேண்டியதாயிற்று. இதிலும் ஆறுமுகநாவலருக்கும் அநகாரிகருக்கும் உள்ள பொருத்தம் வெளிப்படுகின்றது. நாவலரும் தமது இளமைக் கல்வியைக் கிறிஸ்தவப் பாடசாலைகளிலேயே பெற்றுக்கொண்டார் என்பது யாவரும் அறிந்த விஷயமாகும்.

### கல்வி

இளைஞர் டேவிட் கொட்டாஞ்சேனை செயின்ட் பெனடிக்ஸ் கல்லூரி, கோட்டே கிறிஸ்தவக் கல்லூரி, செயின்ட் தோமஸ் கல்லூரி, ஆகிய கல்லூரிகளில் ஆங்கிலம் கற்றூர். பின்னர் அரசினர்கல்விப்பகுதியில் சிறிது காலம் கடமையாற்றிவிட்டு இல்வாழ்வு தமக்கு கந்ததொன்றல்லவென்பதையும் நாட்டுக்கு நலம்தரும் வகையில் தொண்டாற்ற ஆங்கில எஜமானரிடம் அஞ்சி ஒடுங்கிச் செய்யும் இப்பிச்சைச் சேவகம் சற்றும் உதவாதென்பதையும் கண்டு அதனை அடியோடு உதறித் தள்ளி வெளியேறினர். கொட்டாஞ்சேனையில் கல்வி கற்ற காலத்தில் இளைஞர் டேவிட் அங்கிருந்த தீபதுத்தாராமர் என்னும் கோவில் வழியே செல்வது வழக்கம். இப் பௌத்த கோவிலில் முழு இலங்கையிலும் பெரும் புகழ்பெற்ற மொஹொட்டிவத்தை குணனந்த அடிகள் என்னும் பிக்கு வசித்து வந்தார். இவர் சிம்மகர்ஜனை போன்று சொல் முழக்கஞ் செய்யவல்ல பௌத்தப் பெரும் பிரசாரகராக விளங்கினர். இவர் சொற்பொழிவுகளில் தலையாயது பாணந்துறையில் நிகழ்த்தப்பட்டதாகும். இப்புகழ்பெற்ற சொற்பொழிவு ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

குணனந்தரின் பௌத்த ஆர்வம் டேவிட்டின் உள்ளத்திற்கும் ஊக்கத்தையும் உணர்ச்சியையும் தந்தது. தமது மதத்தைக் கற்பதிலும் மத அனுட்டானங்களை அனுட்டிப்பதிலும் அதிக அக்கறைகாட்டலானர். அவர் பௌத்த நூற்களைத் தகுந்த ஆசிரியர்களிடமிருந்தும், தாமாகவும் முறையாகக் கற்றுவந்தார்.

நமது இலங்கைக்கும் கீழைத்திசைக் கலாசாரத்துக்கும் 1878 ம் ஆண்டை ஒரு முக்கியமான வருடமெனக் குறிப்பிடலாம். இவ்வருடத்தில் தான் இந்திய பிரமஞான சங்க ஸ்தாபகரும், கீழ்த்திசை ஞானமார்க்கத்தை உலகெலாம் பரப்பத் தோன்றிய உத்தமியுமாகிய பிளாவட்ஸ்கி அம்மையார் கீழ்த்திசை நாடுகளுக்கு வந்தார். அவருடன் கேர்ணல் எச். எஸ் ஒல்கொட் என்ற பேரறிஞரும் வந்தார். இவர்கள் இருவரும் 1880 ம் ஆண்டில் ஈழவள நாட்டுக்கு விஜயஞ் செய்தார்கள். இங்கே பௌத்தமதம் சீர்குலைந்து கிடக்கும் காட்சியைக் கண்டு அவர்கள் மனம் நொந்தார்கள். கிறிஸ்தவக் கலாசாரம் இங்குள்ள கிறிஸ்தவக் கல்லூரிகள் மூலம் நாள்தோறும் ஓங்கி வருவதையும் பௌத்த பாடசாலைகளின்மையால் பௌத்த கலாசாரம் படுத்து வருவதையும் கண்டு புத்தரின் ஞானமார்க்கத்தில் பேரவாக்கொண்ட இப்பெரியோர் இருவரும் கவலைக்காளாகி, பௌத்த பாடசாலைகளை நிறுவும் இயக்கம் ஒன்றை இலங்கையில் தோற்றுவித்தனர். இதற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் ஆங்காங்கு நடைபெற்ற கூட்டங்களில் இருபது வயது இளங்காளையாக விளங்கிய டேவிட், இப்பெரியோர்களின் பேச்சுக்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க ஆரம்பித்தார். இப்பெரியோர்களின் தொடர்பும் மேடைப் பேச்சில் ஏற்பட்ட பயிற்சியும் மக்கள் தொண்டில் ஆர்வம் கொண்ட இளைஞர் டேவிட்டிற்குப் பின்னல் பெருந்துணையாகின.

இளைஞர் டேவிட் இலங்கை மக்களின் வீழ்ச்சிக்கு அவர்கள் அன்னியக் கலாசாரத்தின் மீது கொண்டிருந்த மோகமே காரணம் என்பதைக் கண்டார். அதனை ஒழிப்பதற்கு முதலில் இலங்கையர்கள் அன்னிய மொழியில் அதாவது தமது கலாசாரத்துக்கு முற்றிலும் புறம்பான ஆங்கில போர்த்துக்கீச, டச்சு மொழிகளில் பெயர் வைத்துக் கொள்வதை அடியோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தவேண்டுமெனத் தீர்மானித்தார். இத்தீர்மானத்தின் பயனே 1880ம் ஆண்டில் டேவிட் என்னும் தமது பெயரை தர்மபாலர் என்று மாற்றுதற்கு அவரை உந்தியது.

### தர்மபாலர்

தர்மபாலர் என்று அவர் அன்று சூடிக்கொண்டபெயர் அவருக்கு எவ்விதத்திலும் பொருந்துவதே என்பதை அவரது பிற்கால சரித்திரம் நன்கு விளக்குகிறது.

1890ம் ஆண்டில் தர்மபாலர் புத்தஞாயிறைப் புவியினுக்களித்து மனித சாகியத்தின் மதிக்கொணு அன்பைப்பெற்று விளங்கும் பாரதநாட்டைத் தரிசிக்க விரும்பி அங்கு சென்றார். அங்கே சென்னை நகரிலுள்ள அடையாறு என்னுமிடத்தில் சிலநாட் தங்கினர். அக்காலத்தில் அவரது சேவையார்வம் அடக்கமுடியாதவாறு பொங்கி எழுந்தது. நித்திய பிரமச்சாரியாக விளங்கி பௌத்தத்தின் வளர்ச்சிக்குத் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிக்கவேண்டுமென்ற ஆசை எழவே, அது பற்றித் தமது அன்புக்குரிய தந்தை தாயருக்கெழுதினர். தமது தீர்மானத்தை நிறைவேற்ற அவர்களது அனுமதியையும் ஆசியையும் கோரி நின்றார் அவர். தந்தையார் முதலில் சம்மதிக்கவில்லை. ஆனல் தனயனின் திடசித்தம் தந்தையின் உள்ளத்தை முடிவில் மாற்றியது. தாயாரும் அவ்வாறே ஈற்றில் இணங்கினர். “எனவே இதா குழந்தைகளைப் பராமரிக்கவேண்டிய பொறுப்பு என்னுடையதாயிருக்கிறது. இல்லாவிடில் நானும் உன்னேடு சேர்ந்து பௌத்தத்தை வளர்க்க முன்வருவேன்” என்று ஆசி கூறினர் அவர்.

தந்தை தாயரின் அனுமதியை இவ்வாறு சம்பாதித்துக் கொண்ட தர்மபாலர் தம்பெயருக்கு முன்னல் பிரமச்சாரி என்று பொருள்படும் அநகாரிகர் என்ற பதத்தையும் சேர்த்துக்கொண்டார். அதன்பின்னர் அவர் பெயர் அநகாரிக தர்மபாலர் என்றாயிற்று.

அநகாரிக என்பது வடமொழிப்பதம். கிரகஸ்தனல்லாதவன், இல்வாழ்வை துறந்தவன் என்பது அதன் பொருள். பௌத்த சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு பிக்குமாருக்குப் பல அனுட்டானங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அவ்விதிகளின்படி நிதி திரட்டுதல், தொழில்புரிதல், போன்றவை கூடத் தடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதிகளுக்கியையப் பௌத்த மதப் பிரசாரத்தைத் தீவிரமாகச் செய்தல் முடியாத காரியமாகும். இதன் காரணமாகவே தர்மபாலர் பிக்குவாக விரும்பாது அநகாரிகராகவிருந்து செயலாற்ற விரும்பினர்.

### மகாபோதி சங்கம்

அநகாரிக தர்மபாலர் அதன்பின் முழுமூச்சுடன் பௌத்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார். அக்காலத்தில் புத்தகாயா என்னும் புகழ்பெற்ற பௌத்த க்ஷேத்திரம் இந்துக்களின் ஏகபோக ஆதிக்கத்தில் இருந்துவந்தது. பௌத்தர்களுக்கு இதில் எவ்வித உரிமைகளும் இருக்கவில்லை. நியாயமற்ற இந்நிலையை மாற்றுதற்கு அநகாரிகர் 1890ல் ஒரு பொதுஜன இயக்கத்தை ஆரம்பித்தார். இதற்கடுத்த வருடத்தில் பௌத்த பிரசாரத்தை ஒழுங்காக உலகெல்லாம் செய்தற்கு மகாபோதி சங்கத்தையும் தோற்றுவித்தார். இச்சங்கத்தின் கிளைகள் கல்கத்தா, சென்னை, இலங்கையுட்பட பல இடங்களிலும் பின்னல் ஸ்தாபிக்கப்பட்டன.

தர்மபாலர் 1893ம் ஆண்டில் அமெரிக்காவில் சிக்காகோவில் கூடிய சர்வமத பாராளுமன்றத்தில் பௌத்த மதத்தின் சார்பில் கலந்து கொண்டார். இதே மகாநாட்டில் இந்துமத புனருத்தாரணரான ஸ்ரீ விவேகானந்தரும் கலந்துகொண்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இம் மகாநாட்டில் பௌத்த தத்துவத்தின் உள்ளுறை பொருட்களை அறிஞருலகம் மெச்சும் வகையில் எடுத்தோதிய பெருமை அநகாரிகரைச் சாரும்.

சிக்காகோவிலிருந்து மீளும் பொழுது ஹொனலுலு என்னும் தீவில் தர்மபாலர் சில நாட்கள் தங்கினர். அப்பொழுது போஸ்டர் ரொபின்சன் என்னும் மாதொருத்தி பௌத்த மதத்தின் பெருமையை உணர்ந்து அநகாரிகரை வந்தடைந்தார். இப் பெண் பெரும் செல்வமுடையவளாயிருந்தமையால் பௌத்தப் பிரசாரத்துக்கென ஏராளமான பணத்தைச் செலவிட்டு அநகாரிகருக்கு ஒத்தாசை புரிய முன்வந்தாள்.

தர்மபாலர் பின்னல் பிரான்சில் பாரிஸ் நகரில் ஒரு பௌத்த நிலையத்தைத் தோற்றுவித்தார். அவர் முயற்சியால் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் பௌத்த நிலையங்கள் பின்னல் தோற்றுவிக்கப்பட்டன.

### புத்தகயாவில்

தர்மபாலர் புத்தகயாவில் யாத்திரீகர்கள் படும் கஷ்டங்களைப் பலமுறை கண்டு கவலை கொண்டிருந்தார். ஆகவே அங்கு ஒரு நல்ல மடத்தைக் கட்டுதற்கு ஆசை கொண்டு அவ்வாறே 1904ல் அங்கே ஒரு மடத்தைக் கட்டி முடித்தார்.

சிங்கள பௌத்தர்களுக்கென ஒரு பத்திரிகையும் அவரால் தோற்றுவிக்கப்பட்டது. “சிங்கள பௌத்தம்” என்னும் அப்பத்திரிகை இன்றும் ஒழுங்காக வெளிவந்துகொண்டிருக்கிறது. “மகாபோதி” அச்சியந்திரசாலையும் அவரால் நிறுவப்பட்டது. “புடிஸ்ட்” என்னும் ஆங்கில இதழையும் அவர் தோற்றுவித்தார்.

1911ம் ஆண்டில் தர்மபாலர் ஒரு புதுவிதமான பிரசாரமுறையை இலங்கை முழுவதும் நடாத்தலானர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் வண்டி ஒன்றுடன் சிறு இல்லம்போல் அமைந்த இன்னேர் வண்டியை இணைத்து அதிலேயே வசித்துக்கொண்டு இலங்கை முழுவதும் சுற்றி வரலானுர் அவர். வழிநெடுகக் கூட்டங்கள் பலவற்றை நடத்தி மக்களுக்கு விழிப்பூட்டும் பணியை இடையருது செய்துவந்தார் தர்மபாலர்.

தர்மபாலர் கலாசாரத்துறையில் அன்னியப் பெயர்களை ஒழிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. சிங்களப் பெண்கள் மேல்நாட்டுக் கவுண்களை விரும்பியணிவதைக் கண்டு அவர் கவலைகொண்டார். சேலைகளை அணிய வேண்டுமென்னும் பிரசாரத்தை அவர் தீவிரமாக நடத்தி வந்தார். அவரது தீவிர பிரசாரமே இன்று சிங்களப் பெண்கள் அழகிய சேலைகளை அணிவதற்குக் காரணம்.

சிங்கள ஆண்கள் போர்த்துக்கீசர் காலந்தொடக்கம் தமது தலைகளில் கொம்புச் சிப்புகளை அணிந்துவந்தார்கள். இதையும் அநகாரிகர் நீக்குதற்கு விரும்பினுர். "சிங்கள ஆண்கள் மாடுகளா? இல்லாவிட்டால் அவர்கள் தலையில் எப்படிக் கொம்புகள் முளைத்தன?" என்று பரிகாசமாகக் கேட்பார் தர்மபாலர். நாளடைவில் அவரது இயக்கம் பெரும் வெற்றி கண்டது. சிங்கள மக்கள் தலையிலிருந்த கொம்புகள் யாவும் இருந்த இடம் தெரியாது ஒழிந்து போயின.

1915ம் ஆண்டில் இலங்கையில் பௌத்த முஸ்லீம் கலவரம் மூண்டதல்லவா? இக் கலவரத்தின் போது அநகாரிக தர்மபாலர் இந்தியாவிற்கு நாடுகடத்தப் பட்டார். அவருக்கு அது சிறந்த வாய்ப்பாயிற்று. பௌத்த பிரசார வேலைகளை ஒழுங்காக நடத்தி வந்தார் அவர். இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்து புத்தகயாவின் எதிர்காலத்தைப் பற்றிப் பலவித பேச்சுவார்த்தைகள் நடத்தினுர்.

அத்துடன் அங்கே இரு பௌத்த கோவில்களையும் அமைப்பித்தார். இதில் ஒன்று கல்கத்தாவில் அமைக்கப்பட்டது. இதன் பெயர் "தர்மராஜிக விகாரை" என்பது. மற்றது சாரநாத்தில் அமைக்கப்பட்டது. இது "மூலகண்ட கூட விகாரை" என்றழைக்கப்படுகிறது.

தம் வாழ்நாளின் பிற்பகுதியை தர்மபாலர் இந்தியாவிலேயே கழித்து வந்தார். புத்தர் பிறந்த பொன்னுடு அவருள்ளத்தைத் தொட்டிழுக்கும் நன்னுடாக விளங்கியது. அங்கே தம் வாழ்வின் அந்திய காலத்தை ஒரு பிக்குவாகக் கழிக்கவேண்டுமென்று அவர் விரும்பினுர். அதன் பிரகாரம் சாரநாத்தில் பௌத்த சங்கத்தில் சேர்ந்தார். "ஸ்ரீ தேவமித்த தர்மபாலர்" என்ற துறவுப் பெயர் அவருக்குச் சூட்டப்பட்டது.

தேவமித்தர் சாரநாத்திலுள்ள மூலகண்ட கூட விகாரையில் 1933ம் ஆண்டில் தம் பூதவுடல் துறந்து புகழுடம்பெய்தினுர். சாகுமுன்னர் அவர் கூறிய கடைசி வார்த்தைகள் பின்வருமாறு:--

"என் கடைசி நேரம் அணுகிவிட்டது. நான் மீண்டும் ஜனிக்கும் போது பௌத்தத்திற்காக உழைக்க, இந்திய மண்ணில் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறப்பேனுக. பௌத்தத்திற்காக உழைப்பதற்கு, உலகெலாம் பௌத்த உண்மைகளைப் பரப்புதற்கு இன்னும் இருபத்தைந்து பிறவிகளை இவ்வுலகில் எடுப்பதற்குக் கூட நான் தயாராயிருக்கிறேன்."

தேவமித்தரின் இவ்வார்த்தைகள் அவர் இந்தியாவைத் தம் கலைத்தாயகமாக ஆத்மீகத்தாயகமாக முழு மனதுடன் ஏற்றிருந்தார் என்பதை நன்கு காட்டுகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நல்லுறவை வளர்க்க அவரது இவ்வார்த்தைகள் நமக்குப் பயன்படுவதாக!

---

## வழிபிறக்க நாம் வாழ்த்தி . . . .

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

3. காற்றுமழை வெள்ளத்தின் கஷ்டம்சேதம்
கலவரங்கள் உயிரழிவு விடுமற்றும்
தோற்றதுவும் சட்டமறுப் பியக்கம் எங்கள்
தொழிலாளர் வேலைசெய்யாத் தொல்லையோடு
மாற்றெணு வறுமையெலாம் வழங்கியெம்மை
மனம்பதைக்கச் செய்தசென்ற மறங்கொ
ளாண்டின்
சாற்றரிய துயர்நீங்கிப் புதியவாண்டில்
சகலருக்கும் "வழிபிறக்கத்" தையின்
பொங்கல்

4. சாதிசமயம்பாஷைச் சழக்கை நீக்கித்
சகோதரர்போல் தமிழர் சிங்களவர்முஸ்லீம்
பேதமற ஒருமித்த நேசப்பான்மை
பெற்றுலவத் தொன்றுதொட்ட பெருமை
யோடு
ஏதமறு கலைகலா சாரப்பண்பும்
இனியசமா தானசுதந் திரத்தின்மாண்பும்
போதியமட்டாயுதவப் புனிதப் பொங்கல்
பொலிய வழிபிறக்கவென்றே போற்று
வோமே.

5. தரைக்குளணி யெனவளங்கள் மலிந்தசெல்வத்
தாயகமாம் இலங்கைமணித் திருநாடின்றே
புரக்குமர சாங்கநெறி புரையிலாது
புகலரிய சமரசமாம் சுபீட்சமுற்று
வரப்புயர வெனமுன்னுள் ஔவையம்மை
வாயார வாழ்த்தியவா றின்றும்நாமே
வரப்புதிய வாழ்வென நெஞ்சாரவாழ்த்தி
வணங்குவோம் வழிபிறக்க வணங்குவோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஸில்றீ அணைக்கட்டு.

# மின்சாரத்துறையில் மேலும் ஒரு படி முன்னேற்றம்

"மக்களுக்கு மலிந்த விலையில் மின்சாரம் தருவோம்"
—பிரதமர்.

கடந்த டிசம்பர் மாதம் 19 ம் திகதி லக்சப்பானை நீர் மின்சாரத்திட்டத்தின் இன்னோர் புதிய கட்டம் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவால் தொடங்கிவைக்கப்பட்டது. இது இலங்கையின் மின்சார வளத்தில் மேலும் ஒருபடி முன்னேற்றமாகும்.

பிரதமர் லக்சப்பானைத்திட்டத்தின் 11 ஏ கட்டத்தைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் நமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மலிவான மின்சார சக்தி மிக மிக அவசியமெனக் குறிப்பிட்டார். இதனால்தான் அரசாங்கம் சமீபத்தில் சப்தகன்னி மின்சாரத்திட்டம், வளவை மின்சாரத்திட்டம் விக்டோரியா நீர் வீழ்ச்சி மின்சாரத் திட்டம், ரத்னபுரி மின்சாரத் திட்டம் ஆகியவற்றைத் தொடங்குதற்கு தீர்மானித்திருக்கிறதென்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது :—

மலிந்த மின்சாரத்தின் அவசியத்தை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. அதன் காரணமாக மின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சாரவள அபிவிருத்திக்கு மிகவும் முக்கிய ஸ்தானத்தை அரசாங்கம் அளித்துவருகிறது. "11 பி கட்ட வேலையையும் அடுத்த ஆறுமாதங்களில் தொடங்குதற்கு அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறது. இத்திட்டம் முடிவுற்றதும் 50.000 கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்யப்படும். 1ம் கட்டம் "11 ஏ" கட்டம் ஆகிய இரண்டு கட்ட வேலைகளாலும் உற்பத்தி செய்யக்கூடிய மொத்த மின்சார சக்தியிலும் இது அதிகமாகும். கொழும்பு பாலத்துறையில் ஒரு புதிய மின்சார நிலையமும் நிறுவப்படும். இங்கு 25,000 கிலோவாட் சக்தி கிடைக்கும்.

**பிரதமர் காலஞ்சென்ற திரு. விமலசூரியா என்னும் மாவட்ட எஞ்ஜீனியருக்கு அஞ்சலி செலுத்தினர். அவர் 1916ம் ஆண்டிலேயே இலங்கையின் நீர் மின்சாரவள அபிவிருத்திபற்றித் திட்டம் தீட்டினரென்றும் அவரது முன்யோசனைக்கு லக்சப்பானைத்திட்டம் சான்றுபகர்கிறதென்றும் பிரதமர் குறிப்பிட்டார்.**


லக்சப்பானைத் திட்டத்தின் 1ம் கட்டத்தைப் பூர்த்தியாக்க 35 வருடங்கள் பிடித்ததைச் சுட்டிக் காட்டிய பிரதமர் இரண்டாவது கட்டம் நான்கு வருடங்களில் பூர்த்தியாக்கப்பட்டதெனக் கூறினர்.

"ஆனல் இதற்காக நாம் பெருமைப்படக் கூடாது. மற்ற நாடுகள் உதாரணமாக சோவியத் யூனியன், சீன போன்ற நாடுகள் நிறுவியுள்ள நீர் மின்சாரத்திட்டங்களுடன் ஒப்பிடும்பொழுது நமது திட்டங்கள் சமுத்திரத்தின் ஒரு திவலை போலவே தோன்றுகின்றன.

காஸில்றீ அணைக்கட்டினூடாக நீர் பாய்வதற்கான மின்சாரத் தெறியைப் பிரதமர் அழுத்தித் திறந்துவைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காஸில்றி அணைக்கட்டைத் திறந்தபின்னர் பிரதமர் சொற்பொழிவு ஆற்றியபோது எடுக்கப்பட்ட படம்.

ஆனால் அது எவ்விதமாயினும் நாம் ஒரு நல்ல திட்டத்தைத் தொடங்கிவிட்டோம். மலிந்த மின்சார சக்தியை ஒவ்வொரு நகருக்கும் கிராமத்துக்கும் அளிக்கும்வரை அரசாங்கம் சற்றும் ஓயமாட்டாது" என்று பிரதமர் பலத்த கரகோஷத்துக்கிடையே குறிப்பிட்டார்.

பிரதமர் இவ்விழாவிற்கென காசில்றீ அணைக்கட்டுக்கு வந்து சேர்ந்தபோது பொது வேலை போக்குவரத்து மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அவரை வரவேற்றார். ஒரு தொழிலாளி அவருக்கு மாலை சூட்டினார்.


அதன்பின் ஒரு பொத்தானை அமுக்கி 11 ஏ கட்ட வேலைகள் அவரால் தொடங்கிவைக்கப்பட்டன. பொத்தானை அமுக்கியதும் நோட்டன் நீர்த்தேக்கத்துள் தண்ணீர் பாய ஆரம்பித்தது.

போக்கு வரத்து பொது வேலை மந்திரி திரு மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் மின்சாரசக்தி கைத்தொழில் அபிவிருத்திக்கும் மக்களின் வாழ்க்கைத் தர அபிவிருத்திக்கும் இன்றியமையாத ஒன்றெனக் குறிப்பிட்டார்.

வளவைத்திட்டம், சப்தகன்னித் திட்டம் ஒந்தெனிகலைத் திட்டம், விக்டோரியா நீர் வீழ்ச்சித் திட்டம், ரத்னபுரித்திட்டம் ஆகிய புதிய நீர்மின்சாரத்திட்டங்கள் சீக்கிரம் தொடங்கப்படுமென்றும் இவற்றுக்காக ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டிருக்கின்றன என்றும் திரு. சேனநாயக்கா கூறினார். இவையாவும் பூர்த்தி பெற்றதும் மொத்தம் 855,000 கிலோவாட் நீர்மின்சாரசக்தி கிடைக்கும் என அவர் அறிவித்தார்.

அவர் மேலும் பேசும் போது இத்திட்டம் வெற்றிகரமாக முடிதற்கு உதவிய சகலர்க்கும் நன்றி கூறினார். வெளி நாட்டு தொழில் நுட்ப அறிஞர்களுக்கு விசேஷமாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோட்டன் பாலத்திலுள்ள புதிய மின்சார நிலையத்தைப் பிரதமர் திறந்து வைத்த காட்சி.

*சமாதான சகஜீவியம்*

பிரதமர் பண்டாரநாயக்கா பின்னர் அலங்கரிக்கப் பட்ட ஒரு ரயில் வண்டியில் திட்டத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டார். லக்சபானே மின்சார நிலையத்தைத் திறந்துவைக்கும் போது பிரதமர் பின் வருமாறு குறிப்பிட்டார் :—

***" லக்சபானேத் திட்டத்தில் சமாதான சகஜீவியத்தின் பலனே நாம் காண்கிரேறும். பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் இத்தாலி ஆகிய பல நாடுகள் இதன் வெற் றிக்கு உதவியிருக்கின்றன".***

---

## இலங்கையில் இயற்கை வளம்

(18 ம் பக்கத் தொடர்ச்சி)

கோடி ரூபா நெல்லுக்காக அனுப்பப்படுகின்றது. ஒரு காலத்தில் இலங்கையினின்று நெல் ஏற்றுமதி செய்யப்பட்டது. பட்டினப்பாலை என்னும் சங்க நூலில் " காவிரிப்பூம் பட்டினத்து இறக்குமதியைப் பற்றிக் கூறும்பொழுது கங்கை வாரியும் காவிரிப் பயனும் ஈழத்துணவும் " என்னும் குறிப்புக் காணப்படுகிறது. நம் நாட்டின் பூரண தேவைக்கு வேண்டிய நெல்லை நாம் விளைவிப்பது அத்தியா வசியமாகும்.

வடமாகாணத்திலும் வட மத்திய மாகாணத்திலும் உள்ள ஏரிகளுள்ள பிரதேசத்தில் அதிர்ஷ்டவசமாக மலேரியா என்னும் கொடிய நோய் பரவாது தடுக் கப்பட்டுள்ளது. தமிழ்ப் பேசும் மக்களுக்குச் சிறப்பாக வும், பொதுவாக இலங்கையிலுள்ள ஏனைய மக்களுக்கும் விவசாயமே நமது தேசப் பொருளா தாரத்துக்கு அச்சாணி என்பதை உணர வேண்டும். இலங்கை ஏரிகள் தொகை 12,000 என எல்சிகுக் என்னும் பூமிசாஸ்திர ஆசிரியர் மதிப்பிடுகின்றார். இலங்கையின் சுபீட்சம் மின்னேரியா, காளவாவி, பராக்கிரம சமுத்திரம், கந்தளாய் போன்ற ஏரிகளி லேயே தங்கியிருக்கிறது என்று அறிவுறுத்துவோம்.

" ஏரி வளம் கேளாத செவி என்ன செவியோ
இரும்பாலே செம்பாலே செய்திட்ட செவியே "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டு மத்தியில் பழைய ............

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

ரால் உருத்திரபுரம் சிவாலயத்தை புனருத்தாரணம் செய்வது பற்றி ஒரு ஆலோசனைக் கூட்டம் 4.5.55 ல் நடைபெற்றது. கூட்டத் தீர்மானப்படி குறித்த உருத்திரபுரம் சிவாலய மைதானத்தில் 1955 ம் ஆண்டு யூன் மாதம் 14 ந் திகதி உருத்திரபுர சிவாலய மகாநாடு ஒன்று கூடப்பட்டது. இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் முதலிய வெளி இடங்களில் உள்ள அன்பர்கள் அழைக்கப்பட்டனர். உருத்திரபுரம் சிவாலய மகாநாடு ஸ்ரீ. சு. வேலாயுத சுவாமிகளுடைய விடுதியில் நடைபெற்றது. இவருக்கு வேண்டிய உதவிகளைத் திருநெறிக் கழகம் செய்து கொடுத்தது. இந்த உருத்திரபுரச் சிவாலய மகாநாட்டில் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வது பற்றித் தீர்மானித்து ஒரு சபை அமைக்கப்பட்டது. தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சிவாலய புனருத்தாரண சபை அமைக்கப்பட்டது.

உருத்திரபுரம் சிவாலய புனருத்தாரண சபையின் முயற்சியால் 1955 ம் ஆண்டு யூன் மாதம் 29 ந் திகதி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இத்தினம் தொடக்கம் சிவாலய நித்திய நைமித்தியங்கள் நடைபெற்று வருகின்றன.

### பூசை தமிழில்.

உருத்திரபுரம் சிவாலயத்து வழிபாட்டு முறையில் ஒரு புதுமையுண்டு. இங்கு சாதி வித்தியாசமின்றி எல்லோரும் ஆசாரமாக வழிபடலாம். இலங்கையில் தமிழில் பூசை நடைபெறும் ஆலயம் இது ஒன்றேயாகும். பக்தர்கள் ஆசாரசீலராக தமக்கு உகந்த தோத்திரங்களைச் சொல்லி பெருமானை வழிபடுகின்றனர். இந்த வழிபாட்டு முறை இலங்கையில் வேறு ஒரு ஆலயத்திலும் இல்லை. திருவண்ணாமலை ஆதீனத்து மகா சந்நிதானம் தவப்பெரும் திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் இச் சிவாலயத்திற்கு எழுந்தருளி சுவாமி தரிசனமும் செய்துள்ளார்கள். பிரமித்தார்கள்; அருள்வயப்பட்டு கண்ணீர் சிந்தி நெக்குருகினார்கள். இச்சிவாலய புனருத்தாரணம் வேகமாக நடைபெறவேண்டும் எனப் பணித்தார்கள். இச்சிவாலயத்தின் சூழலில் பெரிய தெய்வீக சக்தி இருப்பதாக கூறினார்கள். தமிழில் பூசை நடைபெறவேண்டும் என்ற தமது ஆசையை தமிழகத்திலும் பார்க்க ஈழம் நிறைவேற்றிய செயலை பாராட்டினார்கள். ஸ்ரீ வடிவேல் சாமி அவர்கள் இச்சிவாலயத் திருப்பணியில் ஈடுபட்டு இயக்குவதை அறிந்து மகிழ்ந்தார்கள்.

உருத்திரபுர சிவாலய புனருத்தாரண சபையில் தலைப்புலவர் க. நவரத்தினம், திரு. ச. அம்பிகைபாகன், திரு. ஆர். செல்லையா, டாக்டர் பசுபதி, திரு. ஆ. மார்க்கண்டர், சிறுப்பர் கனகசபை, திரு. க. சதாசிவம், திரு. த. நல்லதம்பி, திரு. நா. தம்பிரத்தினம், திரு. எ. எஸ். முருகேசு போன்ற பல அன்பர்கள் ஈடுபட்டு அயராது உழைத்து வருகின்றார்கள். இச்சிவாலயத்திற்கும், அபிவிருத்திக்குமாக 10 எக்கர் நிலம் அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சிவாலயத்திற்கு அம்பாள், விநாயகர் விக்கிரகங்கள் 27.8.58 ல் பிரதிட்டை செய்யப்பட்டன. இந்த விக்கிரகங்கள் மதுரையைச் சேர்ந்த திரு. பொ. கந்தசாமி ஆசான் அவர்களால் செதுக்கப்பட்டது. சென்ற வருடம் இவ்விக்கிரகங்கள் கும்பாபிசேகம் செய்யப்பட்டிருக்க வேண்டியது. ஆனால் சில தவிர்க்க முடியாத காரணங்களால் காலம் தாழ்த்தப்பட்டது.

உருத்திரபுர சிவாலயம் இலங்கையின் வடபகுதியில் ஒரு சிறந்த சிவாலயமாகும். இது சைவ நன்மக்களுக்கொரு பெரிய யாத்திரை ஸ்தலமாக அமைகின்றது. கிளிநொச்சி, கணேசபுரம் ஜெயந்திநகர், வட்டக்கச்சி, இராமநாதபுரம், முரசுமோட்டை, அக்கராயன், பரந்தன் முதலாய பல குடியேற்றத் திட்டங்களின் மத்தியில் இச்சிவாலயம் அமைந்துள்ளது. கும்பாபிசேகங்கள் முடிய இச்சிவாலயத் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெறவுள்ளது. எல்லாச் சைவப் பெருமக்களும் இச்சிவாலயத்தைத் தரிசித்து மனச்சாந்தி பெற்று உருத்திரபுரீஸ்வரர் அனுக்கிரகத்தைப் பெறுவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை நூதனசாலையை நிறுவுதல்

சாதாரணமாக எல்லாக் குழந்தைகளுமே இறகுகள், உடைந்த குருவிக் கூடுகள், இலைகள், மலர்கள், கற்கள் போன்ற பலவிதமான பொருட்களைச் சேகரிக்கின்றன. இவையெல்லாம் யாராவது ஒரு பையனின் கால் சட்டைப் பையில் இடம் பெற்றுவிடுகின்றன. கடைசியில் இவை குப்பைத் தொட்டியில் வீசியெறியப் பட்டால் இவற்றைச் சேகரிக்கும் பொழுதிருந்த குதூகலத்தில் பாதி மறைந்து விடும். பொருட்களைச் சேகரிக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அவைகளைப் பயன்படுத்துவது எவ்விதம் என்பது குறித்து சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறோம். இதன்படி பொருட்களைச் சேகரிக்க ஆரம்பித்தால் நீர் வாழும் உலகத்தைப் பற்றியும் அதிலுள்ள பல்வகை உயிர்களின் வாழ்க்கைகளைப்பற்றியும் சுவாரஸ்யமான கதைகளைக் கூறும் சிறந்த பொருட் காட்சிக்கான பொருட்களின் சொந்தக்காராரகிவிட உமக்குச் சந்தர்ப்பம் ஏற்படும்.

**ஆரம்பித்தல்**

தம்மைச் சுற்றியுள்ள உலகத்தைத் தெரிந்துகொள்ள இயற்கை நூதனசாலையொன்று அவசியமா என்பதைப் பொருள் சேகரிப்பவர் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும். முதலில் இதைத் தீர்மானித்துக்கொண்டால் மற்ற விஷயங்களை மிகவும் இலகுவாகவும், அதிக செலவின்றியும் செய்து கொள்ளலாம். இது நல்ல பொழுதுபோக்குமாகும். இதற்குத் தேவையானதெல்லாம் இவ்வேளையில் உண்மையான ஆர்வமும், நல்ல மூளையும், சிறிது கற்பனைத்திறனும், உங்கள் கைகளுமேயாகும். அத்துடன் மை, நிறக் கலவைகள், மசி, சில சதுர அடி கொண்ட ஒரு பலகை முதலியனவும் தேவை.

இயற்கை நூதனசாலை கற்பாறைகளைப் பற்றியும், தாதுப் பொருட்களைப்பற்றியும், தாவரங்களைப் பற்றியும், மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் முதலியனவற்றைப் பற்றியும் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பமளிக்கும். அதிக பணமும், மிகவும் இடவசதியுள்ள அறையும் தேவையில்லை. படுக்கை அறையின் ஒரு மூலையோ, விருந்தையோ உங்களின் இயற்கை நூதனசாலையாகலாம். பறவைகளின் இறகுகளை ஒரு பலகையில் பதித்து அவை மூலம் வெவ்வேறு நிற இறகுகள் எவ்விதம் பறவைகளை அவற்றின் எதிரிகளிடமிருந்து மறைக்கின்றன வென்பதையும், தமது சோடிகளை எவ்விதம் தம்பால் ஈர்க்கின்றன வென்பதையும் காட்டலாம். அல்லது படங்கள் அல்லது மாதிரிகள், சிறுத்தையினதும், மானினதும் எலும்புகள், பற்கள், நகங்கள், தோல், மயிர், முதலியவைகளைக்கொண்டு ஒரு புலியின் வாழ்க்கையை சிறிய குட்டியாகவிருந்து வேட்டைக் காரனால் கொல்லப்படும் வரையுள்ள அதன் சரித்திரத்தைக் காட்டலாம்.

கண்ணாடிப் பெட்டிகள் காட்சிப் பொருட்களைப் பத்திரப்படுத்தவும், சேதமடையாமல் பாதுகாக்கவும் தேவை. ஆனால் ஒரு நூதனசாலையை ஆரம்பிக்க அவை தேவையில்லை. மலிவாகப்பெறக்கூடிய மரப் பலகைகளினால் செய்யப்பட்ட சாதாரண பெட்டிகள் "பிளாஸ்டிக்" அல்லது எண்ணெய்த்துணி அல்லது சுத்தமான கடுதாசியினால் மூடப்பட்டிருந்தால் போதும். காட்சிப்பொருட்களைப் பதித்திருக்கும் பலகைகள், கடினமான மட்டையாகவோ, "பிளைவுட்" எனும் ஒட்டுப் பலகையாகவோ இருக்கலாம்.

ஒரு இயற்கைச் சரித்திர நூதனசாலையை நிறுவும் பொழுது கீழ்க்காணும் விஷயங்களைக் கவனத்திற் கெடுத்துக்கொள்ள வேண்டும்:—

(1) உமக்கு இயற்கை நூதனசாலை தேவையா என்பதைத் தீர்மானிக்கவேண்டும்.
(2) நூதனசாலைக்கு உள்ள இடவசதி எவ்வளவு என்பதைக் கவனிக்கவேண்டும்.
(3) இடத்தின் அளவைக் கவனமாக ஆராய்ந்து எவ்விதமான காட்சிப் பொருள்களை வைப்பதெனவும், எவ்விதம் அவற்றை வைப்பதெனவும் தீர்மானிக்கவும்.
(4) இடத்திற்கான வரிவடிவப் படத்தைத் தயாரிக்கவும்.
(5) உமக்குத் தேவையான பொருட்களைச் சேகரிக்கத் துவங்குக.
(6) உமது சேகரிப்புப் பொருட்களை சரியாக வகைப் படுத்தவும்.
(7) பொருட்களைக் கண்கவரத்தக்க முறையில் பதித்து, சரியான குறிப்புகளிடுக.
(8) நீர் சேகரித்த பொருட்களுடன், உமது காட்சிப் பொருட்களை விளக்கத்தக்க படங்களைச் சேகரிக்கவும். இப்படங்களிற் சில, சேகரிப்பாளரே கீறிய வரைதல்களாகவும், வரிவடிவப் படங்களாகவும் இருக்கலாம்.
(9) நீர் விரும்பினால், பின்னணியை களிமண், மணல் முதலியவற்றைக் கொண்டு அமைத்து, விலங்குகள், மரங்களின் மாதிரி உருவங்களை சுண்ணச் சாந்து அல்லது அரக்கினால் அமைக்கலாம்.
(10) உமது நூதனசாலை முழுவதையும் உம்மால் இயன்றளவு வசீகரமுடையதாக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(11) உமது காட்சிப் பொருட்களை மிகவும் வனப்பு மிக்கதாகவும், ஆர்வமளிக்கத்தக்கவையாகவும், பூரணமுடையதாகவும் ஆக்குக. முதல் முயற்சியில் சேகரிக்கப்பட்டவை நல்லவையாயிருக்க முடியாது. உம்மாலியன்ற நேரத்தில் பழையவைகளுக்குப் பதிலாக நல்ல பொருட்களைக் கொண்டு காட்சிப் பொருட்களை நிரப்புக.

அத்தியாயம் 2.

அடுத்ததாக நீர் எவ்விதமான பொருட்களைச் சேகரிக்க விரும்புகிறீர் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். நீர் தாவரங்களையா, பூச்சிகளையா, பறவைகளையா, ஊர்வனவற்றையா அல்லது விலங்குகளையா அல்லது கற்களையா சேகரிக்க விரும்புகிறீர்? முடியுமானால் அண்மையிலுள்ள நூதனசாலையைப் பார்வையிடலாம். அது உமக்கு இது சம்பந்தமான சில விஷயங்களைக் கிரகிக்க உதவும். பொருட்களைக் காட்சிக்கு வைக்கும் முறைகளிற் சில கீழே தரப்படுகின்றன.

**1. காட்சி அறைகள் :** இதற்கு சாதாரண புத்தகப் பெட்டிகளையோ, பிரத்தியேகமாக இதற்கெனச் செய்யப்பட்ட பெட்டிகளையோ உபயோகிக்கலாம். இந்தப் பெட்டிகளில் கல்வரிசைகளையோ, சிப்பி வரிசைகளையோ, மற்றும் பொருட்களையோ வைக்கவேண்டாம். ஏதாவது ஒரு காரணத்தோடு இவை அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பொருளுக்கும் விளக்க அட்டைகள் தயாரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கட்டடத்தின் பின்புறத்திலும் ஒவ்வொரு பொருளின் விபரமும் தரப்பட்டிருத்தல் வேண்டும். இதைக்கொண்டு ஒவ்வொரு பொருளினதும் சரித்திரத்தை அறியக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

**2. பலகை பதித்தல் :** மலிவும் ஆடம்பரமற்றதுமான முறை இதுவாகும். பலகை "பினைவுட்" பலகையாயிருக்கலாம். காட்சிக்குரிய படங்களை பலகையில் ஒட்டலாம் அல்லது ஊசியினுல் குத்தி வைக்கலாம். தோல், எலும்பு போன்ற பொருட்களை பசியினுல் ஒட்டி வைக்கலாம். அல்லது கம்பியினுல் கட்டி அழகாகத் தொங்கவிடலாம்.

**3. கண்ணுடிப் பெட்டிகள் : காட்சிப்பொருட்கள் பூச்சிகளினுல்** சேதப்படுத்தப்படுமெனக் கருதப்படுமிடத்து அல்லது காட்சிப்பொருட்கள் விலையுயர்ந்தவையாயிருந்து அவற்றைப் பூட்டிவைக்கவேண்டிய நிலைமையேற்படுமிடத்து இம்முறையைக் கையாளலாம்.

**4. "கெபினட்" பெட்டிகள் :** அதிக பணச்செலவு இம்முறையைப் பின்பற்றினுல் ஏற்படும். அத்துடன் மற்ற முறைகளைப் போல் பொருளின் சரித்திரத்தை அறிய இம்முறை உதவாது. கண்கவர் நூதனசாலையொன்றை அமைக்க கீழ்க்காணும் சாதாரண விதிகளைப் பின்பற்ற வேண்டும் :—

(அ) பொருட்களைப் பற்றி தெளிவான அறிவைப் பெறக்கூடாதவிதமாகப் பல பொருட்களைக் கொண்டு அறையை நிரப்ப வேண்டாம். காட்சிப் பொருளை ஆராயக் கூடிய விதமாக போதிய இடம் விடப்படவேண்டும்.

(ஆ) ஒவ்வொரு காட்சிப்பொருளும் கதைக்கு அத்தியாவசியமானவையாயிருத்தல் வேண்டும்.

(இ) நூதனசாலையை எந்தநேரத்திலும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். காட்சிப் பொருட்களை முறையாகவும் சரியாகவும் வைக்கவேண்டும்.

(ஈ) காட்சிப் பொருட்களைத்தின்று சேதப்படுத்தும் பூச்சிகளை நாப்தலின் வில்லைகளை அல்லது பென்சின் பாடிக்கிளோறைட்டை உபயோகிப்பதன் மூலம் கொன்றுவிடுங்கள். அடிக்கடி பொருட்களைப் பரீட்சித்து பூச்சிகளைக் கொன்றுவிடுங்கள்.

(உ) சூரியவெளிச்சம் படாதபடி பொருட்களை வைக்கவும். அப்படிச் செய்யாவிட்டால் நிறம் மங்கிப்போகும்.

(ஊ) சேகரித்த பொருட்களை விட நல்லவைகளைப் பெற எப்பொழுதும் முயலுங்கள்.

அத்தியாயம். 3

**பொருட்களைச் சேகரித்தல்**

குறிப்புப்புத்தகத்தை எடுத்துச் செல்லல் நூதனசாலைக்காக பொருட்களைச் சேர்க்கப்போகும் பொழுது குறிப்புப் புத்தகமொன்றையும் கொண்டு செல்க. சேகரித்த பொருட்களைப் பற்றிய குறிப்புகளை குறித்துக் கொள்ளவேண்டியதவசியம். இக்குறிப்புகளிலிருந்து பொருட்களின் வரலாறு விபரிக்கப்படும். ஒரு மரத்துண்டில் கறையான் புற்று ஒன்று இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனை நீர் காட்சிப் பொருளாக வைக்க விரும்பினுல் கீழ்க்கண்டவிதமாக குறிப்பெடுக்கப்படல் வேண்டும்.

"1958ம் ஆண்டு நவம்பர் மீ 25ந் திகதி" வவுனியாவிலே யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் பாதையில் 2 மைல் தூரத்திலே கறையான்கள் நிறைந்த ஒரு மரத்துண்டு காணப்பட்டது. வேலைக்கார கறையான்களுக்கு பெரிய ஊதா நிறத்தலைகளுண்டு. போர்வீரர்களுக்கு சிறிது பருத்த கருந்தலைகளுண்டு. அவைகளுக்கு நீண்ட மூக்குகளும் காணப்படுகின்றன. அவற்றின் உடம்பு ஊதா நிறமுடையது. இறகுள்ள ஆண், பெண் கறையான்கள் மஞ்சள் கலந்த ஊதா நிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology ...
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No........



மூடையவை. இவற்றின் சரீரம் சிறு மயிர்களால் மூடப்பட்டிருக்கிறது. அத்துடன் தோற்றமளிப்பவைகளை விஸ்தரித்துவிட்டு மரத்துண்டுகளில் புற்றுகள் அமைக்கும் பொழுதும் அவை என்ன செய்கின்றன என்பதையும் விபரிக்கவேண்டும். போர்வீரர்களின் மாதிரி உருவங்களைப் பெரிதாகச் செய்து வைத்திருப்பது நூதனசாலைக்கு அழகளிப்பதாகும். அவை போரிடும் விதத்தையும் வேலைசெய்யும் விதத்தையும் மாதிரி உருவங்களின் மூலம் காட்டவேண்டும்.

அவை நடந்துகொள்ளும் விதத்தை வர்ணிப்பதோடு கறையான்களின் படங்களை வரைவதால் பெரும்பயன் பெற முடியும். பெரும்பாலோர் விபரங்களை மறந்துவிடுகின்றனர். இரத்தினபுரி மாவட்டத்தில் கற்களைச் சேகரித்தால் விலையுயர்ந்தகனிஜப் பொருட்களைப் பெறும் பாக்கியம் உமக்குக் கிட்டவும் முடியும். நீர் சேகரிக்கும் பொருட்களைப் பற்றி குறிப்புகள் எடுத்திராவிட்டால் ஒருமுறை பெற்ற விலையுயர்ந்த கற்களை மீண்டும் பெறுவதற்கு முடியாமற் போய்விடுகிறது. பொருட்களைப்பெற்ற பிரதேசங்களைப் பற்றி சரியான குறிப்புகள் எடுப்பதன் மூலம் நாம் கனிஜவர்க்க சாஸ்திரி, தாவரவியல் அறிஞர், பிராணியியலறிஞர் போன்றவர்களுக்கு பெரும் உதவியைச் செய்யமுடியும்.

**விஷம் கலந்த பாத்திரம்:** சிற்றுயிர்களைச் சேகரிக்கும் பெரும்பாலாருக்கு விஷம் கலந்த பாத்திரம் அவசியம். அபாயகரமற்ற விஷமுள்ள பாத்திரத்தைத் தயாரிக்க கீழ்க்காணும் முறையைப் பின்பற்றலாம். ஒரு பைந்து "எதில் எசெடெட்டை" வாயகன்ற ஒரு போத்தலில் அல்லது கூஜாவில் நீர் கலந்த "பிலாஸ்டர் பெரிஸ்" கலவையை ஒரு அங்குல உயரத்திற்கு ஊற்றி வைக்கவும். இக்கலவை இறுகியதும், இதிலுள்ள நீராணுக்கள் காய்ந்து போகும் வரை இதற்குச் சூடேற்ற வேண்டும். இக்கலவையின் மேல் அரை அங்குல உயரத்திற்கு "எதில் எசெடேட்" திராவகத்தை ஊற்றிச் சில நாட்களுக்கு மூடிவைக்கவும்.

பிளாஸ்டர் கலவையில் இத்திராவகம் சார்ந்துவிடும். எஞ்சியிருக்கும் பகுதியை வெளியே ஊற்றிவிட வேண்டும். இதில் நீராணு எஞ்சியிருந்தால் அதையும் ஒற்றியெடுத்துவிட இரண்டு அல்லது மூன்று ஒட்டுத்தாள்களை கலவையின் மேல் வைக்கவேண்டும். இவ்விதம் தயாரிக்கப்பட்ட கலவை பெரும்பாலான பூச்சிகளைக் கொன்றுவிடும். இதனை சுமார் ஒரு வருடத்திற்கு வைத்துக்கொள்ளலாம்.

பொருட்களைச் சேகரிப்பதற்காக வெளியே போகும் பொழுது பல கூஜாக்களைக்கொண்டு செல்லவேண்டும். ஒரு கூஜாவை மாத்திரம் எடுத்துச் சென்றால் வண்ணாத்திப் பூச்சிகள், மற்றும் சிற்றுயிர்கள் முதலியவற்றை பெருவண்டுகளோடு கூஜாவில் போட்டவுடனே. வண்டுகள் மற்ற பூச்சிகளை அழித்துவிட முடியும் சிலந்திகளையும் மற்றும் மிருதுவான சரீரத்தைக் கொண்ட பூச்சிகளையும் சிறிய போத்தல்களில் சேகரிக்க வேண்டும். பொருட்கள் சேகரிக்கப்பட்டு போத்தலில் இடப்பட்டதும், பொருட்களைப் பெற்ற இடத்தின் பெயர், திகதி ஆதியவைகளடங்கிய குறிப்பை அவ்விடத்திலேயே குறித்து போத்தலில் ஒட்டிவிடவேண்டும். மதுவகை கிடைக்காவிட்டால் 10 % கலந்த போர்மலின் கலவையை உபயோகிக்கலாம். ஆனால் இது சிலந்திகளுக்கு உதவாது. சிறிய, மிருதுவான சரீரங்களையுடைய பூச்சிகளைப் பக்குவப்படுத்த கீழ்க்காணும் கலவை நல்லது.

| கலவைப் பொருட்கள் | அளவு |
|---|---|
| அசெடிக் அமிலம் | 10 |
| ஹைட்ராக்றி பெர்குளோரைட் (திரவம்) | 10 |
| கிலிசரின் | 10 |
| மது (90%) | 80 |
| வடிகட்டப்பட்ட நீர் | 50 |

**பால் குடிக்கும் பிராணிகளைச் சேகரித்தல்:** நாய் பூனை முதலிய மயிருள்ள பிராணிகளைப் பால் குடிக்கும் பிராணிகளென்போம். உயிருள்ள இப்பிராணிகளைச் சேகரிக்காது அவற்றின் எலும்பு, மயிர், பல், சுவடுகள், தோல் போன்றவைகளையும், அவற்றின் படங்களையும் சேகரிப்பது அறிவுடைமையாகும். இவ்விதமான பொருட்களைச் சேகரிக்கும் பொழுது மிகவும் கவனமாகச் சேகரிக்க வேண்டும். ஒவ்வொரு பொருளையும், குறிப்பிடப்பட்ட உறைகளில் இடவேண்டும் குறிப்புக் கொப்பியில் உறைகளில் இடப்பட்டிருக்கும் அடையாளத்தைக் குறித்து எல்லாத் தகவல்களும் குறிக்கப்படல்வேண்டும். சிறிதளவு "குளோரொக்ஸ்" கலந்த கொதிக்கும் நீரில் எலும்புகள் சுத்தப்படுத்தப்பட வேண்டும். எலும்பில் இறைச்சி, அழுக்கு இருந்தால் அவை சுரண்டப்படவேண்டும்.

## அத்தியாயம் 4

**பொருட்களைத் தரம் பிரித்தல்:** பொருளின் பெயரைச் சரியாகக் கண்டுபிடித்து எழுதுவதுதான் மிகவும் கஷ்டமான வேலை. சிலவற்றை மிகவும் எளிதில் கண்டுபிடித்துவிடலாம். மற்றவைகளை அறிவது கஷ்டம். உண்மையான உழைப்பின் மூலமாகவே இவை சம்பந்தமான அறிவைப் பெறமுடியும். இதற்கு ஆசிரியர்களினதும், விவசாய, வனப்பாதுகாப்பு, கடற்றொழில் உத்தியோகத்தர்களினதும் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வுத்தியோகத்தர்கள் தங்களால் தெரிந்துகொள்ள முடியாத பொருட்களை இவை சம்பந்தமான விசேஷ அறிவுள்ளவர்களுக்கு அனுப்பித் தெரிந்துகொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சாஸ்திரரீதியில் பொருட்களைத் தரம் பிரித்தல்:*

விஞ்ஞானப் பெயர், ஆங்கிலப் பெயருடன், தமிழ், சிங்களப் பெயர்களைக் குறித்தல் வேண்டும். சிங்களத்தில் "பட்டிச்சா" என்றே "களனிக்குருவி" வகையைச் சேர்ந்த எல்லாக் குருவிகளும் அழைக்கப்படுவதால் சாஸ்திர ரீதிப்பெயர்களைக் குறித்தல் அவசியம். எவ்வளவு தான் கஷ்டமான போதிலும் தாவரவியலறிஞரும், நிலவியலறிஞரும், பிராணியியல் அறிஞரும் பின்பற்றும் சாஸ்திரோக்த முறைத்தரம் பிரித்தலையே மாணவர்கள் அறிந்துகொள்வர். ஒரு பொருளின் பெயர் விபரங்களை அறிய நிபுணரிடம் பொருளை அனுப்பும் பொழுது கீழ்க்காணும் விஷயங்களைக் கவனித்தல் வேண்டும் :—

1. ஒவ்வொரு பொருளினதும் உள்ளூர்ப் பெயரையும் அது கிடைத்த இடத்தையும் மற்றும் உம்மிடமுள்ள குறிப்புகளையும் விளக்கமாகக் குறித்தல் வேண்டும்.
2. ஒரு பாத்திரத்தில் ஒரே வகையைச் சேர்ந்த மிருகங்களையும், தாவரங்களையும் வைக்கவேண்டும். மற்றவர்க்கங்களிலிருந்து அவற்றைப் பிரித்து வைத்தல் அவசியம்.
3. உலர்ந்த செடி, கொடிகளை கடுதாசியில் சுற்றி தடித்த மட்டைகளை இருபுறத்திலும் வைத்துக் கட்டி அனுப்பவேண்டும். இச் செடிகளின் பூக்கள் அல்லது பழங்கள் இருந்தால் அதனையும் அனுப்புவது நல்லது.
4. நிபுணருக்கு எழுதும் கடிதத்தில் அவரளிக்கும் உதவிக்காக அவரைப் பாராட்டி எழுதுக. அவர் பலவேலைகளிலீடுபட்டவராயிருப்பார். அதனால் பதிலெழுதக் காலதாமதமேற்படலாம். நீர் யாவரென்பதை அவருக்கு எழுதினால், பல வேலைகளுக்கிடையிலும் உமது வேலையைச் செய்ய அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

இவையெல்லாம் மாணவர்களை இயற்கை ரசிகர்களாக்க அளிக்கப்படும் உதவிகளாகும். பொருட்களைச் சேகரிப்பவர் காலகதியில் பெருந்தொகையான நண்பர்களைப் பெறுவதோடு இத்துறையில் தமது அறிவையும் விருத்தி செய்து கொள்வார். ஒரு வேளை சிற்றுயிரியலறிஞர்கள் இதுவரை கண்டுபிடிக்காத ஒரு பூச்சியைக் காணும் சந்தர்ப்பம் இவருக்குக் கிடைக்கலாம். உடனே அப்பூச்சியின் பெயரோடு இவரது பெயரும் இடம்பெற வழியேற்படும்.

## நாலந்தா சர்வகலாசாலை

(14 ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து பலர் வருவதுண்டு. மங்கோலியா, கொரியா முதலிய தூர தேசங்களிலிருந்தும் பல அறிஞர்கள் இங்கு வந்தனர் என்று சொல்வதொன்றிலேயே இக் கலாசாலையின் பெருமையடங்கும். இட்சிங் என்ற சீன யாத்ரீகர், இக்கலாசாலையில் பத்து வருஷ காலம் தங்கிப் படித்தார். இவர் திரும்பித் தமது நாட்டுக்குச் செல்லும்போது நானூறுக்கும் அதிகமான ஓலைச் சுவடிகளை எடுத்துக்கொண்டு போனரென்று சொல்லப்படுகிறது.

**நிர்வாகம்**

நாலந்தை சர்வகலாசாலையின் நிருவாகத்தைச் சிறிது கவனிப்போம். எல்லாருக்கும் மேலாக அத்தியட்சகர் இருந்தார். அறிவு, ஆற்றல், அனுபவம் யாவும் ஒருங்கு பெற்றவரே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டனர். இப்பதவியை தற்காலத்து "சான்சலர்" பதவிக்கு ஒருவாறு ஒப்பிடலாம். ஆனல் தற்காலத்து "சான்ஸலர்" ஸ்தானம் வெறும் அலங்காரமாக மட்டும் இருக்கிறது. நாலந்தை சர்வகலாசாலையில் அத்தியட்சகர் பதவி அத்தகையதன்று. மிகப் பொறுப்பு வாய்ந்ததாக இருந்தது. ஹ்யூன்த்ஸாங் இக்கலாசாலையில் தங்கியிருந்த காலத்தில் இப்பதவியிலிருந்து திறமையாக நிருவாகம் செய்தவர் சீலபத்திரர் என்ற பெரியார். அத்தியட்சகருக்கு அடுத்தாற்போல் கர்மதான என்ற ஓர் உத்தியோகஸ்தர் இருந்தார். இவரை விஹாரஸ்வாமி என்றும் விஹாரபாலன் என்றும் அழைப்பதுண்டு. இவரிடத்தில் மாணக்கர்கள் நிரம்ப மரியாதை செலுத்தி வந்தார்கள். இவர் இன்னின்ன ஆசிரியர்கள் இன்னின்ன பாடங்களை எடுத்துக்கொள்ளவேண்டும், பாட முறைகள் என்ன, ஆசிரியர்கள் அந்தஸ்து எப்படி முதலியவைகளை நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்தார்.

இத்தகைய பேருடனும் புகழுடனும் விளங்கிய நாலந்தை சர்வகலாசாலையின் கீர்த்தியானது, கி. பி. பன்னிரண்டாவது நூற்றண்டுத் தொடக்கத்திலிருந்து மங்க ஆரம்பித்தது. இதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று இதற்குப் போட்டியாக விக்கிரமசீலம் (பீகார் மாகாணத்தில்) என்ற இடத்தில் மற்றொரு சர்வகலாசாலை தோன்றியது. இரண்டாவது முஸல்மான்களின் படையெடுப்பு. இவ்விரு காரணங்களினல் இச்சர்வகலாசாலையின் செல்வாக்கு நாளாவட்டத்தில் குறைய ஆரம்பித்தது.

(குமரிமலர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, Point-Pedro Road
Nallur, Jaffna
No............................

## அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|
| 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டம் | 0 45 | 0 10 |
| 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க, முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வக்புகள் சட்டம் | 0 85 | 0 20 |
| 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்கம், ஒத்துழைப்புச் சங்கங்களின் அமைப்பு முறையும் அதிகரிப்பையும் பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திரட்டித் திருத்துவதற்கான சட்டம் | 0 25 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கச் சட்டம் ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் | 0 40 | 0 20 |
| கிராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 148) - மறுபதிப்பு | 1 30 | 0 25 |
| 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்கம் கிராம சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் | 0 10 | 0 10 |
| 1953 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் | 0 35 | 0 15 |
| 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கச் சட்டம் கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்குமான சட்டம் | 0 45 | 0 20 |
| 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டம் நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் | 1 10 | 0 20 |
| 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் | 1 50 | 0 20 |
| 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்து (திருத்த)ச் சட்டம் | 0 10 | 0 10 |
| அத்தியாயம் 104 தத்துவப் பத்திரங்கள் | 0 20 | 0 10 |
| அத்தியாயம் 120— வியாபாரப் பெயர்கள் | 0 40 | 0 10 |
| 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் | 1 35 | 0 20 |
| 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் | 0 15 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் | 0 10 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம் - தாங்கள் செய்துவரும் வேலைக் கிரமத்திற் சேதமடையும் வேலையாட்களுக்கு நஷ்ட பூர்த்திப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம் | 0 35 | 0 20 |
| 1935 ம் ஆண்டில் ஏற்படுத்திய வேலையாட்கள் நஷ்ட பூர்த்தி விஷய ஒழுங்கு விதிகள் | 0 35 | 0 20 |
| அத்தியாயம் 91— நொத்தாரிஸ்மார் (1938 ல் திருத்தியமைக்கப்பட்டது) | 1 30 | 0 35 |
| 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்தலுக்காகவும் பராதீனப்படுத்துதலுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கான சட்டம் | 0 55 | 0 35 |
| 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்கச் சட்டம் – ஊவர்ச்சங்கங்கள் | 2 90 | 0 35 |
| 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம் - வேலையாட்கள் சம்பளச் சங்கச் சட்டம் | 0 50 | 0 20 |
| அத்தியாயம் 95, கலியாணப் பதிவுச் சட்டம் | 0 55 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க கலியாணப் பதிவுத் திருத்தச் சட்டம் | 0 50 | 0 10 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org